Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 36 கதிர் : 352 | வியாழக்கிழமை | கார்த்திகை 02 ஆம் நாள் 18 நவம்பர் 2021 | வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

**தொற்று 728**
**சாவு 23**

(விரிவு 14ஆம் பக்கம் )

## வடக்கில் மழைக்கு வாய்ப்பு

கொழும்பு, நவ. 18
வடக்கில் குறிப்பாக, யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டங்களில் இன்று மழை அல்லது இடியுடன் கூடிய மழைக்கு வாய்ப் 14

## கிளிநொச்சியில் 46 பேருக்கு கொரோனா

கிளிநொச்சி, நவ. 18
கிளிநொச்சி மாவட்டத்தில் பாடசாலை மாணவர்கள் 10 பேர் உட்பட மொத்தம் 46 பேருக்கு நேற்று கொரோனாத் தொற்று 14

## மனோ எம்.பிக்கு கொரோனா

கொழும்பு, நவ. 18
தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும், நாடாளு 14




# அரசின் ஆயுள் முடிகிறது விரைவில் மக்கள் ஆட்சி!

## நாடாளுமன்றில் ஐக்கிய மக்கள் சக்தி சபதம்

கொழும்பு, நவம்பர் 18

"இந்த அரசின் ஆயுள் முடியப்போகின்றது. ஐந்தாண்டுகள்வரை ஆட்சியில் இருக்க விட மாட்டோம். அதற்கு முன்னர் விரட்டியடித்து, மக்கள் எதிர்பார்க்கும் ஆட்சியை உருவாக்குவோம்." என்று ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்றுக்குள் வைத்து சூளுரைத்துள்ளது. 14





**முச்சந்தி முரளி**

"இஞ்ச பதவியைக் கவிழ்க்க பட்ஜெட்டைப் பாவிக்கிற மாதிரி பார்லிமெண்டிலயும் பாவிக்க ஏலாதோ? சும்மா ஒரு டவுட்"

## வல்வெட்டித்துறை நகர சபையில் தோற்றது 'பட்ஜெட்' கவிழுமா ஆட்சி?

யாழ்ப்பாணம், நவ. 18
வல்வெட்டித்துறை நகர சபையின் வரவு-செலவுத்திட்டம் நேற்று தோல்வியடைந்தது. இந்த நிலையில், அண்மையில் ஆட்சிக்குவந்த புதிய அணியின் ஆட்சியும் கவிழுமா என்ற நிலை ஏற்பட் 14

## இளம் குடும்பஸ்தர் வெட்டிக்கொலை!

### பரந்தனில் பயங்கரம்



கிளிநொச்சி, நவ. 18
கிளிநொச்சியில் வெட்டுக்காயங்களுடன் ஒரு பிள்ளையின் தந்தை நேற்று சடலமாக மீட்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
கிளிநொச்சி, கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பரந்தன்- சிவபுரம் பகுதியில் தற்காலிக கொட்டகை ஒன்றுக்குள் வெட்டுக்காயங்களு 14

## முல்லை. மாவட்டத்தில் நினைவேந்தலுக்கு 28 பேருக்குத் தடை

முல்லைத்தீவு, நவ. 18
முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு மற்றும் முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுகளில் மாவீரர் நாளை நினைவேந்த 28 பேருக்கான தடை உத்தரவை பொலிஸார் முல்லைத்தீவு நீதிமன்றில் நேற்றுப் பெற்றுள்ளனர்.
அதன்படி, எதிர்வரும் 20ஆம் திகதி தொடக்கம் 30ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் மாவீரர்களை 14

## போராட வந்த இளைஞன் பொலிஸ் தாக்குதலில் சாவு!

- விசாரணையைக் கோருகிறது எதிரணி
- பொலிஸ் காரணமல்ல என்கிறார் அமைச்சர்

கொழும்பு, நவ. 18
ஐக்கிய மக்கள் சக்தியின் போராட்டத்தில் பங்கேற்க வந்த இளைஞர் ஒருவர் பொலிஸாரின் 14



இளைஞன் கொல்லப்பட்டார் என்று குற்றஞ்சாட்டப் படும் பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்ட மக்கள்

## ராஜபக்சக்களை வீட்டுக்கு அனுப்ப மக்களுடன் தேரர்களும் இணைவு

### இரா. சம்பந்தன் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 18
அரசை வீட்டுக்கு அனுப்பும் நடவடிக்கையில் சிங்கள மக்கள் மட்டுமல்ல, பௌத்ததேரர்களும் கைகோர்த்துள்ளனர். இனி ஒன்றும் செய்ய முடியாத நிலைக்கு அரசு வந்துள்ளது. இனி என்ன நடக்கப்போகின்றது என்பதை எம்மால் எதிர்வுகூற முடியாமல் உள்ளது" - என்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற 14

## மாதகலில் காணி சுவீகரிப்பு எதிர்ப்பால் கைவிடப்பட்டது

### பேச்சு நடத்தி பறிக்கத் தீர்மானம்



யாழ்ப்பாணம். நவ. 18
மாதகல் மாரீசன்கூடல் ஜே/150 பகுதியில் தனியார் காணி மற்றும் மயானத்துக்கு சொந்தமான காணி என்பவற்றை அபகரிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்றுக்காலை போராட்டம் ஒன்று பிரதேச மக்களால் மேற்கொள்ளப்பட்டது.
1.6 ஹெக்ரேயர் விஸ்தீரணம் கொண்ட காணி 11

## அடுத்த மாதம் இலங்கை இருளில்

கொழும்பு,நவ.18
அடுத்த மாதம் முதல் இலங்கை இருளில் மூழ்கும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி எச்சரித்துள்ளார்.
எதிர்வரும் டிசெம்பர் மாதம் 5 ஆம் திகதி இலங்கைக்கு எரிபொருள் கப்பல் வரும் என்று அரசு உறுதியளித்த போதிலும், அதற்கு செலுத்துவதற்கு போதிய டொலர் அரசிடம் இல்லை.
பழுது நடவடிக்கை காரணமாக சபுகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையம் மூடப்படவில்லை. கச்சா எண்ணெய்க்கு செலுத்த வேண்டிய டொலர் இல்லாத காரணத்தால்தான் மூடப்பட்டுள்ளது. இதனால் விமான நிலையத்துக்கான எரிபொருள் வழங்கல் நிறுத்தப்பட்டு, விமான சேவைகளும் நிறுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-4)

## ஏ–9 வீதிக் கரையோரங்களில் வாகனங்கள் நிறுத்தத் தடை

யாழ்ப்பாணம்,நவ.18
வடக்கு மாகாணத்தின் ஏ-9 பிரதான வீதியின் இரு கரையோரங்களிலும், அனுமதியின்றி வாகனங்களை நிறுத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் வடமாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜகத் பலிஹக்கார தெரிவிக்கையில்,
வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களில், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அனுசரணையுடன் பொருத்தமான வாகனத் தரிப்பிடங்களை அடையாளம் காண்பது அந்தந்தப் பொலிஸ் அதிகாரிகளின் பொறுப்பு. வீதிகளில் பணி முடியும் வரை சாரதிகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் சம்பந்தப்பட்ட பகுதிகளில் எச்சரிக்கைப் பலகைகளை வைக்கவேண்டும்.
இதனைக் கண்காணிக்க பொலிஸ் போக்குவரத்து உத்தியோகத்தர்களை கடமையில் ஈடுபடுத்த வேண்டும்.
வட மாகாணத்தில் இந்த வருடத்தில் கடந்த ஒக்ரோபர் மாதம் வரை 128 வீதி விபத்துக்கள் பதிவாகியுள்ளன. 134 பேர் உயிரிழந்துள்ளனர். 23 பேர் படுகாயம் மற்றும் 308 சிறிய காயமடைந்துள்ளனர்.
எனவே சாரதிகள் வாகனத்தைச் செலுத்த முன்னர் பாதுகாப்பு நடைமுறைகளைக் கடைபிடிக்க வேண்டும். சரியான பாதை வேக வரம்புகளை உறுதிசெய்து, விபத்துகளைக் குறைப்பதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்-என்றார். (ஒ-4-20)

(A/L) சித்தியடைந்த SMARTGEN கணக்குரிமையாளர்களுக்கு

நென ஜய புலமைப்பரிசில்

உ/த பரீட்சையில் சாதனைபடைத்த 18+ கணக்குரிமையாளராக நாளையை வெல்ல இன்றே விண்ணப்பியுங்கள்.




நென ஜய சிறப்புப் புலமைப் பரிசில்

- மாதமொன்றுக்கு ரூ.1000 வீதம் 4 வருடங்களுக்கு (ஒருவருக்கு ரூ.48,000)

ஒவ்வொரு பாடத் திட்டத்தின் கீழும் 2020ம் ஆண்டில் நாட்டில் அதியுயர் z score 200 பெற்றுக் கொண்ட, BOC 18+/18+ SmartGen கணக்கு வைத்திருக்கும் மாணவ மாணவியருக்கு 81 புலமைப் பரிசில்கள் வழங்கப்படும்.

நென ஜய திறமைக்கான புலமைப் பரிசில்

- மாதமொன்றுக்கு ரூ.1000 வீதம் 3 வருடங்களுக்கு (ஒருவருக்கு ரூ.36,000)

ஒவ்வொரு பாடத் திட்டத்தின் கீழும் 2020ம் ஆண்டில் நாட்டில் அதியுயர் z score ஐ பெற்றுக் கொண்ட BOC 18+/18+ SmartGen கணக்கு வைத்திருக்கும் மாணவ மாணவியருக்கு 300 புலமைப்பரிசில்கள் வழங்கப்படும்.

நென ஜய புலமைப் பரிசில்களுக்கான தகைமைகள்

- உயிரியல் விஞ்ஞானம்/பௌதீக விஞ்ஞானம்/வர்த்தகம்/கலை/உயிரியற் கட்டமைப்புத் தொழில்நுட்பம் மற்றும் பொறியியல் தொழில்நுட்பம் ஆகிய பிரதான பாடப்பிரிவுகளின் கீழ் 2020ம் ஆண்டில் நாடளாவிய ரீதியிலும், அவ்வாறே மாவட்ட மட்டத்திலும் உயர் பெறுபேறுகளைப் பெற்ற BOC 18+/18+ SmartGen கணக்கு வைத்திருக்கும் மாணவ மாணவியர் இப் புலமைப் பரிசில்களுக்காக விண்ணப்பிக்கலாம்.
- 2020.08.01ம் திகதியிலிருந்து 2021.01.31 வரை தமது கணக்கில் ரூ. 10,000 குறைந்தபட்ச மீதியைப் பேண வேண்டும்.
- அல்லது 2020.11.01ம் திகதி முதல் (2021.05.04) பெறுபேறுகள் வெளியிடப்படும் திகதிக்கு முந்திய திகதி வரை ரூ.10,000க்கான குறைந்தபட்ச மீதி பேணப்பட்டிருக்க வேண்டும். (COVID 19 தொற்று காரணமாக வழங்கப்படும் விசேட சலுகை)

(CR 35472)

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கை வங்கியின் BOC 18+/18+ SmartGen கணக்கு வைத்திருப்பவர்கள் பாடசாலை சீருடையில் எடுத்துக் கொள்ளப்பட்ட பாஸ்போர்ட் அளவிலான வர்ணப் புகைப்படத்துடன், www.boc.lk இணையத்தளத்திலிருந்து தரவிறக்கம் செய்துகொண்ட (Download) விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து உதவிப் பொது முகாமையாளர் (சந்தைப்படுத்தல்), சந்தைப்படுத்தல் பிரிவு, 16ம் மாடி, இலங்கை வங்கி தலைமைக் காரியாலயம், கொழும்பு 01. என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்க வேண்டும்.

"விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி 2021 நவம்பர் 30"

மேலதிகத் தகவல்களை BOC இணையத் தளத்திலிருந்தும், FACE BOOK பக்கத்திலிருந்தும் மற்றும் நாடுமுழுவதிலுமுள்ள BOC கிளைகளிலிருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.


*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

1975 BOC CALL CENTRE
www.boc.lk

தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை கொழும்பு 1.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்





யாழ்.மாவட்டத்தில் நேற்று புதன்கிழமை அதிகாலை முதல் பரவலாக பெய்த கனமழையால் பல வீதிகள் மற்றும் தாழ்நிலப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின.

படங்கள்: ஐ.சிவசாந்தன்

## யாழ்.நகரில் மீன் மழை

யாழ்ப்பாணம்,நவ.18
யாழ்ப்பாணம் நகரில் நேற்று மீன் மழை பொழிந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.
நகர்ப்பகுதி வர்த்தக நிலையங்களில் உள்ளவர்கள், பயணிகள் மீன்களைச் சேகரித்ததை அவதானிக்க முடிந்தது. நீர்த்தாரை மூலம் கடலில் உள்ள சிறிய மீன்கள் மேலெழுந்து வானிலிருந்து விழும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-4)

# பொலிஸ்மா அதிபரின் உத்தரவு அடிப்படை உரிமையை மீறுகிறது!

*பொலிஸ் அலுவலர்களுக்கு எதிராக நடவடிக்கை என்கிறது ஐக்கிய மக்கள் சக்தி*

**கொழும்பு, நவ. 18**

**பொலிஸ் மா அதிபரின் உத்தரவு, அரசமைப்பில் உறுதி செய்யப்பட்டுள்ள மக்களின் கருத்து மற்றும் ஒன்று கூடல் தொடர்பான அடிப்படை உரிமையை பாரதூரமாக மீறும் செயல் - என்று, ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்தது.**

ஐக்கிய மக்கள் சக்தி கொழும்பில் நேற்றுமுன்தினம் ஏற்பாடு செய்திருந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் தொடர்பில் பொலிஸ் மா அதிபரால் மாகாணங்களுக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர்கள் மற்றும் மாவட்டங்களுக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர்கள் மேலும் பொலிஸ் பொறுப்பதிகாரிகள் ஆகியோருக்கு பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகள் குறித்து ஐக்கிய மக்கள் சக்தி உன்னிப்பாகக் கவனம் செலுத்தியுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அறிவுறுத்தலின் பேரில் பொலிஸ் மா அதிபர் வழங்கியுள்ள அறிவுறுத்தல்கள் அரசாங்கத்தின் அரசியல் நலனுக்காக மேற்கொள்ளப்பட்டவை என்பது தெளிவாகிறது என்பதைச் சுட்டிக்காட்டுகிறோம்.

ஆர்ப்பாட்டத்துக்கு பொலிஸ் துறை கோரிய தடை உத்தரவுகள் பல நீதிமன்றங்களால் நிராகரிக்கப்பட்டுள்ள நிலையில், பொலிஸ்மா அதிபரின் உத்தரவு நீதிமன்ற உத்தரவையும் தாண்டிய ஒன்றாக உள்ளது.

கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்த ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட போதிலும் பிரதேச மட்டத்தில் வீதித் தடைகளை நடைமுறைப்படுத்துமாறு அறிவுறுத்தாத பொலிஸ் மா அதிபர், தற்போது, இதுபோன்ற உத்தரவுகளைப் பிறப்பிக்கின்றமை முற்றிலும் அரசியல் தேவை கருதியதாகும்.

அத்துடன் வாகனங்களில் பயணிக்கும் நபர்களின் பெயர்ப் பட்டியலைத் தொகுப்பது, ஒளிப்படங்களை எடுப்பது என்று தனிமனிதரின் சுயாதீனத்துக்குக் கூட சவால் விடுக்கும் அளவுக்கு பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. அந்த உத்தரவுகளின் படி செயற்படும் அதிகாரிகளுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி சட்ட நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதையும் சுட்டிக்காட்டுகின் றோம் - என்று ஐக்கிய மக்கள் சக்தி வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (து)

# வழிபாடுகள் நடத்த தடை

சாவகச்சேரி,நவ.18

தென்மராட்சிப் பிரதேசத்திலுள்ள அனைத்து ஆலயங்களிலும் வழிபாடுகள் மற்றும் உற்சவங்கள் நடத்துவது தடை செய்யப்பட்டுள்ளது என்று சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினர் அறிவித்துள்ளனர்.

ஆலயங்களில் தனிநபர் ஒருவர் சென்று வழிபட அனுமதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பூசைகளை பூசகர் மட்டும் மேற்கொள்ள வேண்டும். பூசைகள் நடைபெறும் வேளையில் கோவில் மண்டபத்துக்குள் அடியார்கள் நிற்கக்கூடாது. பிரதேசத்தில் கொரோனா அதிகரித்து வரும் நிலையில் மக்கள் வழிபாட்டுக்காக ஒன்றுகூடுவதைத் தவிர்க்கும் நோக்குடன் இந்தக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-4)

# மண்டபங்களுக்கு இறுக்கமான கட்டுப்பாடு

சாவகச்சேரி,நவ.18

தென்மராட்சி பிரதேசத்தில் மண்டபங்களில் நிகழ்வு நடத்துவதாயின் சுகாதாரப் பகுதியினரின் அனுமதி பெற்றிருக்கவேண்டும், அனுமதியின்றி நிகழ்வுகள் நடத்துவது கண்டுபிடிக்கப்படின் மண்டபத்துக்கு வழங்கப்பட்ட உரிமம் ரத்துச் செய்யப்படும் என்று சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினர் அறிவித்துள்ளனர்.

மண்டபத்தில் ஒரேநேரத்தில் ஒரு நிகழ்வு மட்டும் நடத்தலாம். அந்த நிகழ்வில் உள்ளேயும், வெளியேயும் 100 பேர் மட்டும் பங்குபற்ற முடியும். குறித்த எண்ணிக்கைக்கு மேலதிகமாக எவரும் நிற்பதை மண்டப உரிமையாளர் அனுமதிக்கக்கூடாது . அத்துடன் கொரோனாத் தடுப்பூசி அட்டை வைத்திருக்காத எவரையும் மண்டபத்துக்குள் அனுமதிக்கக்கூடாது. இவ்வாறான நிபந்தனைகளை மீறி நிகழ்வுகள் நடத்துவது கண்டுபிடிக்கப்படின், மண்டபத்துக்கு வழங்கப்பட்ட உரிமம் ரத்துச் செய்யப்படும் என்றும் அறிவித்துள்ளனர்.(ஓ-4-9)

# சித்தன்கேணியில் வாள்வெட்டு இருவர் மருத்துவமனையில்!

யாழ்ப்பாணம், நவ. 18



வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சித்தன்கேணிப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு வீடுபுகுந்து இடம்பெற்ற மோதல் காரணமாக இருவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சித்தன்கேணி டச்சு வீதியில் அமைந்துள்ள வீடொன்றில், அதன் உரிமையாளர் தனது நண்பருடன் வீட்டு வாசலில் உரையாடிக் கொண்டிருந்த நிலையில் அந்தப்பகுதியால் வந்த இருவர் வீட்டுக்குள் செல்லுமாறு குறித்த வீட்டின் உரிமையாளருக்குத் தெரிவித்தனர்.

இதனால், இருவருக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டுள்ளது. வீதியால் வந்த நபர்கள் இருவரும் தமது பகுதிக்குச் சென்று சுமார் பத்துப் பேருக்கு அதிகமானவர்களை அழைத்துவந்து வீட்டு ஜன்னல், மோட்டார் சைக்கிள் கதவு என்பனவற்றைச் சேதப்படுத்தியதோடு வீட்டின் உறுப்பினரொருவரையும் தாக்கியுள்ளனர். தாக்குதலை மேற்கொள்ளவந்த நபரொருவரும் காயங்களுக்கு உள்ளான நிலையில் அவர்கள் இருவரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். வட்டுக்கோட்டைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-125)




எவ்வளவோ இழுபறிக்குப் பிறகு பள்ளிக்கூடங்கள் திரும்பத் திறந்து பிள்ளையளும் வழமை மாதிரிப் போகத் தொடங்கிட்டினம். ஆனால், சில பள்ளிக்கூடங்களில கொரோனா எண்டபேரில ஒண்டிரண்டு அநியாயங்களும் நடக்குது. அதில ஒண்டுதான் போன கிழமை யாழ்ப்பாணம், அராலிப் பக்கமா உள்ள பள்ளிகூடமொண்டில நடந்திருக்கு.

அந்தப் பள்ளிக்கூடத்தில நாலாம் வகுப்பு படிக்கிற பெடியன், போன எட்டாம் திகதி பள்ளிக்கூடம் போகேலை. அதுக்கடுத்த ரண்டு நாளும் மழை எண்டு எல்லாப் பள்ளிக்கூடத்துக்கும் லீவு. அதால அந்தப் பிள்ளை, பதினோராம் திகதி தகப்பனோட பள்ளிக்கூடம் போயிருக்கிறான். தகப்பனும் அவனை இறக்கி விட்டிட்டு, வீட்ட போட்டார்.

வகுப்புத் தொடங்கினவுடன் அங்க வந்த ரீச்சர் எட்டாம் திகதி வராததுக்கு காரணத்தைக் கேட்டிருக்கா. அதுக்கு அந்தப்பிள்ளை வீடு குடிபுகுதலுக்கு போனனான் எண்டு சொல்லியிருக்கிறான். அதுக்கு ரீச்சர் அதுக்கு மட்டும் போனனியோ? இல்லாட்டி இடும்பன் பூசைக்கும் போனனியோ? எண்டு கேட்டிருக்கிறா. ( புதுசா வீடுகுடிபுகுந்தால் ரண்டுநாள் கழிச்சு மச்சம் காய்ச்சி சாப்பாடு குடுக்கிறதைத்தான் இடும்பன் பூசை எண்டுவினம்) அந்தப் பிள்ளை ஒண்டும் சொல்லாமல் இருக்க, அவாக்கு கோபம் வந்திட்டு.

உடனேயே ரீச்சர் "காய்ச்சல் எண்டு பிரின்சிப்பலுக்கு சொல்லிவிடு" எண்டு இன்னொரு மாணவனோட , இந்தப் பிள்ளையை அனுப்பியிருக்கிறா. பிரின்சிப்பலுக்கு அந்த மாணவன் ரீச்சர் சொன்னமாதிரி சொல்லியிருக்கிறான். உடனேயே பிரின்சிப்பல் "காய்ச்சலோட எதுக்கு இஞ்ச வந்தனீ? கொரோனாவை எல்லாருக்கும் பரப்பவோ? "எண்டு கண்டபடி பேசிப்போட்டு "ஓடு வீட்டை!" எண்டு கலைச்சிருக்கிறார். பிரின்சிப்பல் பேசிக்கலைச்ச பிறகு, என்னெண்டு அந்தப் பிள்ளை நிக்கும்? அது அழுது கொண்டு வீட்டை வந்திருக்கு. பிள்ளை இப்பிடி அழுதுகொண்டு வாறதைக் கண்ட தகப்பன் , நடந்ததைக் கேட்டு அறிஞ்சிட்டு உடனேயே நியாயம் கேக்க பிள்ளையையும் ஏத்திக் கொண்டு பள்ளிக்கூடம் போட்டார்.

அங்கபோய் "எதுக்கு என்ர பிள்ளையை காய்ச்சல் எண்டு சும்மா சொல்லி வீட்டை அனுப்பினீங்கள்? தனிய பிள்ளை வாற வழியில் ஏதுமொண்டு நடந்தா ஆர் பொறுப்பு?" எண்டு தகப்பன் கேட்டிருக்கிறார். அதுக்கு பிரின்சிப்பல் தகப்பனுக்கும் பேசத் தொடங்கிட்டார்.

"பிள்ளையை காய்ச்சலோட இஞ்ச அனுப்பிட்டு கதைக்க வேண்டாம்" எண்டிருக்கிறார். உடனேயே அந்தப்பிள்ளையின்ர தகப்பன், "சரி உங்கட பள்ளிக்கூடத்தில காய்ச்சல் பாக்கிற கருவி இருக்குத்தானே , அதால செக் பண்ணிப் பாருங்கோ. என்ர பிள்ளைக்கு காய்ச்சலோ - இல்லையோ எண்டு தெரியும்" எண்டு சொல்லியிருக்கிறார். அதைக் கேட்டவுடன பிரின்சிப்பலுக்கு என்ன செய்யிறதெண்டு தெரியேலை. உடன அவர் "அது வந்து.. அதுக்கு பற்றறி இல்லை. வேலை செய்யாது" எண்டு சமாளிச்சுப் போட்டு, "உங்கட பிள்ளையால எங்களுக்கு கரைச்சல். லீவிங் சேர்டிபிக்கட் தாறன் வேற ஸ்கூல்ல கொண்டுபோய் சேருங்கோ. என்ர உயிரை எடுக்காமல் இஞ்ச இருந்து போம் வெளியில" எண்டு பிள்ளையையும், தகப்பனையும் கலைச்சு விட்டிருக்கிறார்.

பிள்ளைகளுக்கு காய்ச்சல் இருக்கா? இல்லையா? எண்டு பாக்க ஒரு மிஷினை அரசாங்கம் எல்லாப் பள்ளிக்கூடத்துக்கும் குடுத்திருக்கு. அதுக்கு பற்றறி இல்லை பாக்க ஏலாது எண்டது என்ன கதை? அதைவிட ஒரு பிள்ளைக்கு காய்ச்சல் எண்டு தொட்டுக்கூடப் பாக்காமல் தாங்களாகவே முடிவெடுக்கினமெண்டால் ரீச்சரும், பிரின்சிப்பலும் மெடிசின் படிச்சவையோ? சரி, ஒரு பிள்ளைக்கு காய்ச்சல் எண்டால் பெற்றோருக்கு தெரியப்படுத்தி , வீட்டை பக்குவமாக அனுப்பி வைக்கிறதுதானே முறை. அதைவிட்டு, ஏதோ கொலைக்குற்றம் செய்தமாதிரி அடிச்சுக் கலைக்கிறது என்ன விதத்தில நியாயம்? அந்தப் பிள்ளையின்ர தகப்பன் கேட்ட மாதிரி போறவழியில அந்த நாலாம் வகுப்பு பிள்ளைக்கு ஏதும் நடந்தா ஆர் பதில் சொல்லுவினம்? கொஞ்சமெண்டாலும் படிக்கிற பிள்ளையளில இப்பிடியான பிரின்சிப்பல்மார் கொஞ்சம் மனிசத்தன்மையோட நடப்பினமோ...?



- பட்சி

# வீதியைச் சீராக புனரமைக்கவேண்டும் இல்லையெனில் எதிர்ப்புப் போராட்டம்

## வலி. தென்மேற்கு பிரதேசசபை போர்க்கொடி

**யாழ்ப்பாணம், நவ.18**

**யாழ்ப்பாணம் - மானிப்பாய் வீதி முறையான விதத்தில் புனரமைக்கப்பட வேண்டும். இல்லையெனில் ஒப்பந்தகாரர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு எதிராக மக்களுடன் இணைந்து போராட்டத்தை முன்னெடுப்போம் என்று வலி.தென்மேற்கு பிரதேசசபை எச்சரித்துள்ளது.**



இது தொடர்பில் சபையின் தவிசாளர் அ.ஜெபநேசன் தெரிவிக்கையில்;

ஒரு லட்சம் கிலோமீற்றர் வீதிகளை புனரமைக்கும் செயற்றிட்டத்தின்கீழ் இந்த வீதி புனரமைக்கப்பட்டு வருகின்றது. மானிப்பாய் - காரைநகர் வீதி புனரமைப்பு மக்களின் 50 வருடக் கனவு.

வீதி அபிவிருத்தி தொடர்பில் சபையில் விவாதித்திருக்கிறோம். அகலிக்கப்படாது வீதி அபிவிருத்தி மேற்கொள்ளப்படுகின்றமை, நீர் வடிந்தோடும் வாய்க்கால்கள் கட்டமைக்கப்படாமை, நூற்றாண்டு காலம் பழமை வாய்ந்த பாலங்கள் புனரமைக்கப்படாமை போன்ற குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

பாலங்கள் அனைத்தும் செப்பனிடப்பட்டு, பூர்த்தியான பிற்பாடே வீதிக்கு காப்பெற் இடப்படும் என்று எமக்கு உறுதியளிக்கப்பட்டுள்ளது.

பொன்னாலை- பருத்தித்துறை, சங்கரத்தை -வட்டுக்கோட்டை, கட்டுவன்- மல்லாகம், மல்லாகம்- சங்கானை, போன்ற வீதிகள் எவ்வாறு புனரமைக்கப்படுகின்றனவோ, அதைப் போன்று மானிப்பாய் வீதியையும் புனரமைக்க வேண்டும்.

இரண்டு ஒப்பந்தகாரர்கள் மூலம் வீதி புனரமைப்புச் செய்யப்படுகின்றது.

மானிப்பாய் வீதியில் ஆரம்பப் பகுதியான ஓட்டுமடம் தொடக்கம் ஆனைக்கோட்டை வரையான பகுதிகள் ஒரு நிறுவனத்தாலும், மானிப்பாயில் இருந்து காரைநகர் நோக்கிச் செல்லுகின்ற பிரதான வீதி இன்னொரு ஒப்பந்தகாரராலும் புனரமைக்கப்படுகின்றது.

மழைகாலத்தில் வீதியில் தேங்கி நிற்கின்ற வெள்ளத்தை அகற்ற வேண்டிய சூழ்நிலை காணப்படுகின்றது.

எனவே முறையான விதத்தில் வடிகால் அமைப்புகளை மேற்கொண்டு, பாலங்களை புனர்நிர்மாணம் செய்து, அதன்பின்பு காப்பெற் இடுவதே ஒரு வீதீயின் தரத்தை முழுமைப்படுத்தும். எனவே மக்களுடைய எதிர்பார்ப்புக்களைக் கருத்திற்கொள்ளாமல், முழுமையாக வீதி புனரமைக்கப்படாது காப்பெற் இடப்படுமாயின், பொதுமக்களைத் திரட்டி போராட்டத்தில் ஈடுபட வேண்டிய நிலை ஏற்படும் -என்றார். (ஓ-4-125)

# அறநெறிப் பாடசாலைகளில் மாதிரி நூலகங்கள் அமைப்பு

யாழ்ப்பாணம், நவ.18

அறநெறிப் பாடசாலைகளில் மாதிரி நூலகங்களை அமைக்கும் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

'கல்வியின் சிறந்த குறிக்கோள் பண்புடைமையே' என்ற இந்துசமய அறநெறிக் கல்வியின் மகுட வாசகத்துக்கு அமைவாகவும் 'இளம் இந்துச் சிறார்களின் இதயங்களில் உள்ள தெய்வீகத் தாமரையை மலரச்செய்து அவர்களின் ஆளுமையையும், திறமைகளையும் மலர்ந்து விரிவடைய வைக்கும் கல்வியை வழங்குதல்' என்ற இலட்சிய நோக்குக்கு அமைவாகவும் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் இந்தச் செயற்றிட்டத்தை முன்னெடுத்துள்ளது.

நாடளாவிய ரீதியில் இந்து சமய அறநெறிப் பாடசாலைகள் இயங்குகின்ற மாவட்டங்களில் முதற்கட்டமாக 100 அறநெறிப் பாடசாலைகளுக்கான மாதிரி நூலகங்களை அமைத்து, அதற்கான தளபாடவசதிகள் மற்றும் நூல் கொள்வனவுக்கு நிதியுதவி வழங்கப்படும். அதற்கமைவாக 23 மாவட்டங்களில் 100 மாதிரி நூலகங்கள் அமைக்கப்படவுள்ளன. (ஓ-4)



தேசிய சேமிப்பு வங்கி ஓய்வூதியர் சங்கத்தால் 75 வயதைப் பூர்த்திசெய்து ஓய்வுபெறும் வங்கியாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில், பிரதம விருந்தினராக பிரதேச முகாமையாளர் ந.பகீரதனும், கிளை முகாமையாளர்கள் மற்றும் சகல ஓய்வுநிலை வங்கியாளர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர். இ.சற்குணராஜா,க.சுந்தரலிங்கம், பொன்.குலவீரசிங்கம், ம .யோக்கிம்பிள்ளை ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். (ஓ-ரி1)

# பயணத்தை குழப்பினால் பங்காளிகளுக்கும் ஆப்பு

## இறுதி எச்சரிக்கையை விடுத்தார் மொட்டுக் கட்சிச் செயலாளர்



"அரசின் அபிவிருத்திப் பயணத்தைத் தடுப்பதற்கு, குழப்புவதற்கு முற்படும் தரப்புக்களை ஓரங்கட்டிவிட்டு, விலக்கிவிட்டு, இலக்கை நோக்கிப் பயணிப்பதற்கு இனிக் கடுமையாகச் செயற்படுவோம்." என்று, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.


அரச பங்காளிக்கட்சியாக இருந்தால்கூட இதையே செய்வோம் என்ற தொனியிலும் சாகர காரியவசம் கருத்து வெளியிட்டார்.

"தடையேற்படுத்தும் தரப்பினர் விலக்கப்படுவார்கள் என நீங்கள் அறிவித்தீர்கள். யார் அந்தத் தரப்பினர்?" என எழுப்பப்பட்ட கேள்விக்கு, "யாராக இருந்தாலும், எமது பயணத்தைத் தடுக்கத் முற்படுவார்களாயின், அத்தகையவர்களை அந்த வழியில் இருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்" - என்றார்.

"அதாவது ஆளுங்கூட்டணியிலுள்ள கட்சிக்கும் இது பொருந்துமா" என எழுப்பப்பட்ட கேள்விக்கு, "ஆளுங்கட்சியா? எதிர்க்கட்சியா? அல்லது ஏனைய சக்திகளா என்பது முக்கியமல்ல. இந்த நாட்டை கட்டியெழுப்பவே மக்கள் எமக்கு ஆணை வழங்கினர். அதற்கான பயணத்தின்போது எவராவது தடை ஏற்படுத்தினால் அவர்களை விலக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்"- என்றார்.

அதேவேளை, நாட்டை அபிவிருத்தி செய்வோம் என மக்களுக்கு உறுதியளித்தோம். எனினும், வைரஸுடன் போராடவேண்டிய நிலைமை ஏற்பட்டது. அடுத்த வருடத்தை அபிவிருத்திக்கான வருடமாக அடையாளப்படுத்தியுள்ளோம். இலக்கை நோக்கிப் பயணிப்பதில் தீவிரம் காட்டுவோம்.

குறிப்பாக எமது அபிவிருத்திப் பயணத்துக்குத் தடைகளை ஏற்படுத்த தனிநபரோ அல்லது குழுக்களோ முற்பட்டால் அவர்களை ஒதுக்கி வைத்துவிட்டு, விலக்கிவிட்டு முன்னோக்கிப் பயணிப்போம்." -என்றார். (த-44)




யாழ்ப்பாணம் - சிறுவிளான் ஐயப்பன் ஆலய கும்பாபிஷேகம் கடந்த திங்கட்கிழமை சிறப்புற இடம்பெற்றது. (ஓ-4)

# பாவனைக்கு முன்னரே தாழிறங்கியது பாலம்

மன்னார், நவ.18

மன்னாரில் பாலம் ஒன்று மக்களின் பாவனைக்காக கையளிக்கப்படுவதற்கு முன்னரே வெடிப்புக்கள் தோன்றி தாழிறங்கியுள்ளது.

'ஆயிரம் பாலம்' அமைக்கும் திட்டத்தின்கீழ், வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் மேற்பார்வையில் அதிகளவு வெள்ள நீரோட்டம் காணப்படும் மன்னார் பள்ளங்கோட்டை-மடுக்கரை பிரதான நுழைவுப் பகுதியில் அமைக்கப்பட்ட பாலமே இவ்வாறு தாழிறங்கியுள்ளது.



பாலம் அமைத்தலில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பாக மக்களால் முறைப்பாடுகள் வழங்கப்பட்ட போதிலும் அதிகாரிகள் அதனை அலட்சியப்படுத்தியுள்ளனர் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. மக்களின் வரிப்பணத்தில் கட்டப்பட்ட பாலம் தற்போது உடையும் நிலையில் உள்ளது.

பாலம் முழுவதும் உடைந்து உயிர்ச் சேதங்கள் ஏற்படமுன்னர் சம்பந்தப்பட்ட அதிகாரிகள், திணைக்களத்தினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் நானாட்டான் பிரதேச செயலர் சிறீஸ்கந்தகுமாரிடம் கேட்டபோது, பள்ளங்கோட்டை பாலம் தொடர்பாகப் பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இந்த விடயம் பற்றி மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளருக்குத் தெரியப்படுத்தியுள்ளோம். விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் -என்றார். (ஓ-4-56)

# ஐயப்ப சாமிகளுக்கு மாலை அணிவித்தல்

வவுனியா, நவ.18

வவுனியாவில் ஐயப்ப விரதத்தைக் கடைப்பிடிக்கும் சாமிகளுக்கு மாலை அணிவிக்கும் நிகழ்வு வவுனியா தாண்டிக்குளம் ஐயனார் ஆலயம் மற்றும் கூமாங்குளம் நாகபூஷணி அம்மன் ஆலயம் ஆகியவற்றில் நேற்று நடைபெற்றது.

இந்துக்களால் முன்னெடுக்கப்படும் சபரிமலை சுவாமி ஐயப்பன் விரத பூஜைவழிபாடுகள் நேற்று ஆரம்பமாகியுள்ள நிலையில், ஐயப்பன் சாமிகளுக்கு மாலை அணிவிக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நடைபெற்றன. (ச-110)

# நாவலர் கலாசார மண்டப புனரமைப்புக்கு இடையூறு

## யாழ்.மாநகர சபைக்கு சர்வதேச இந்துமத பீடம் கடிதம்

யாழ்ப்பாணம்,நவ.18

**இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், ஆறுமுகநாவலர் ஆண்டை முன்னிட்டு, ஆன்மிகச் சூழலோடு கூடியதாக ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் கலாசார மண்டபத்தைப் புனரமைப்பதற்கு முன்வந்துள்ளது. இந்தத் தருணத்தில், யாழ். மாநகர சபை இடையூறை ஏற்படுத்த வேண்டாம் என்று சர்வதேச இந்து மத பீட செயலாளர் ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா கோரிக்கை விடுத்துள்ளார்.**

இது தொடர்பில் யாழ். மாநகர முதல்வர் வி. மணிவண்ணனுக்கு அவர் அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மாநகர சபை நிர்வாகம் நாவலர் கலாசார மண்டபத்தில் இதுவரை ஆத்மார்த்தமான எந்தவொரு பணியையும் செய்யாத நிலையில், அங்கு நாவலர் சிலையை வைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. இது உளச்சுத்தியோடு நாவலருக்குப் பணி செய்யும் விடயமாகத் தெரியவில்லை.

நாவலரின் எண்ணங்களுக்கு அங்கு செயல் வடிவம் கொடுக்க விரும்பினால், முதலில் அந்த மண்டபத்தின் அகப்புறச் சூழல் தூய்மையோடு சீராக்கப்பட்டு, ஓர் ஆன்மிகச் சூழல் ஏற்படுத்தப்பட்ட பின்னர், நாவலருக்கு சிலை வைப்பது உயர்வு தருவதாக அமையும்.

நாவலர் செய்த மகத்தான சேவைகளை, சைவத் தமிழ் உலகம் உள்ளவரை என்றும் நினைவு கூரத்தக்க வகையில், அதற்கான செயற்பாடுகளை இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் முன்னெடுப்பதற்கான ஒரு நிலையமாக நாவலர் கலாசார மண்டபத்தை மாற்ற தயவு செய்து வழிவிடுங்கள் அல்லது அவர்களோடு இணைந்து ஆக்கபூர்வமாகச் செயற்படுங்கள் - என்றுள்ளது. (ஒ-4)

# மீன்பிடி வலையில் சிக்கிய மலைப்பாம்பு



யாழ்ப்பாணம்,நவ.18

காக்கைதீவு கடற்பகுதியில் மீனவர் ஒருவரது வலையில் மலைப்பாம்பு சிக்கியுள்ளது.

இதனையடுத்து பரபரப்படைந்த மீனவர்கள் மானிப்பாய் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர்.

சம்பவ இடத்துக்கு விரைந்த மானிப்பாய் பொலிஸார், பாம்பைப் பாதுகாப்பாக மீட்டு, பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்றனர். வனஜீவராசிகள் திணைக்களத்திடம் பாம்பை ஒப்படைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஒ-4)

# நாவலர் சிலை இன்று திறப்பு

யாழ்ப்பாணம்,நவ.18

யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தின் நுழைவாயிலில் அமைக்கப்பட்ட நாவலர் பெருமானின் திருவுருவச் சிலை இன்று முற்பகல் 10 மணிக்கு திறக்கப்படவுள்ளது.

யாழ்.மாநகர சபையின் உறுதுணையுடன், சைவ மகா சபையால் நிறுவப்பட்ட திருவுருவச் சிலையே திறக்கப்படவுள்ளது.

நாவலர் பெருமானின் திருவுருவச் சிலை திறப்பு விழாவை முன்னிட்டு, கலாசார மண்டபத்தைப் புனரமைக்கும் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நாவலர் கலாசார மண்டபத்தின் பராமரிப்புத் தொடர்பில் சர்ச்சைகள் வெளிவந்த நிலையில், தற்போது நாவலரின் சிலை பிரதிஷ்டை செய்யப்படவுள்ளது. (ஒ-4-20)

# நாவலர் கலாசார மண்டபத்தை ஆன்மிகச் சூழலாக மாற்றுங்கள்

## ஆறுமுகநாவலர் சபை கோரிக்கை

யாழ்ப்பாணம்,நவ.18

சைவத் தமிழ் உலகுக்காக தன் வாழ்வை அர்ப்பணித்த நாவலர் பெருமகனின் எண்ணங்களுக்கு ஆரோக்கியமான செயல் வடிவம் கொடுங்கள். நாவலருக்கான பணியை ஆத்மார்த்தமான செயற்பாடாக முன்னெடுங்கள். முதலில் நாவலர் கலாசார மண்டபத்தை ஆன்மிகச் சூழலுக்கு உரிய இடமாக மாற்றுங்கள்.

இவ்வாறு கொழும்பு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பில் யாழ்.மாநகர சபை முதல்வர் வி.மணிவண்ணனுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

எந்தவொரு சட்டச் சிக்கலும் இல்லாமல், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் கலாசார மண்டபத்துக்கு உரிமை பூண்ட இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தோடு, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையினராகிய நாம் கலந்துரையாடி, எதிர்வரும் ஆண்டை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஆண்டாகவும் இருநூறாவது நாவலர் தினமாகவும் முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளோம்.

ஆறுமுகநாவலர் கலாசார மண்டபத்தை முழுமையான ஆன்மிகச் செழுமைமிக்கதோர் இடமாக மாற்றும் வகையில், பத்து மில்லியன் ரூபா செலவில் புனர்நிர்மாணச் செயற்பாடுகளை இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் மூலமாகச் செயற்படுத்தத் தீர்மானித்துள்ளோம்.

ஆனால், மாநகரசபை, நாவலர் கலாசார மண்டபத்தில் முன்னெடுக்கவுள்ள செயற்பாடுபற்றி, அறிந்த செய்தி மிகுந்த மன வேதனையை அளிக்கின்றது.

நாவலர் கலாசார மண்டபத்தில் நாவலர் சிலை நிச்சயமாக வைக்கப்பட வேண்டும். ஆனால், நாவலர் கலாசார மண்டபத்தை ஓர் ஆன்மிகச் சூழலுக்குரிய இடமாக மாற்றிவிட்டு, நீங்கள் இந்த முயற்சியை எடுத்திருந்தால் நிச்சயம் அது மகிழ்ச்சியைத் தந்திருக்கும். இதுவரை காலமும் அதற்கான எந்த முயற்சியும் எடுக்காத மாநகர சபை, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் முன்னெடுக்கின்ற நாவலர் கலாசார மண்டபம் தொடர்பான செயற்பாடுகளுக்குத் தடை ஏற்படுத்தும் செயற்பாடாகவே நாம் இதனைக் கருதுகிறோம்.

யாழ்ப்பாணத்தில் நாவலர் பிறந்த இடத்தில், நாவலர் கலாசார மண்டபம் அமைக்கும் பணிக்கு பின்னூக்கியாக இருந்து செயற்பட்டு, நாவலர் பெருமானின் எண்ணங்களுக்குச் செயல்வடிவம் கொடுக்கும் அத்தனை செயற்பாடுகளிலும் ஆறுமுகநாவலர் சபை தன்னை நிலைநிறுத்தி - முன்னின்று செயற்பட்டு வருகின்றது.

நாவலர் பெருமானின் எண்ணங்களுக்குச் செயல்வடிவம் கொடுக்க எண்ணுகின்ற எவரும் உங்கள் செயற்பாட்டில் போட்டி மனப்பாங்கைத் தவிர்த்துக்கொள்ளுங்கள். சுய இலாபம் தேடும் எண்ணங்களோடு நாவலருக்கான செயற்பாடுகளை முன்னெடுக்காதீர்கள்.

சைவத் தமிழரின் நலனுக்கான செயற்பாடாக உங்கள் அனைவரதும் செயற்பாடு அமையட்டும். ஒரு ஆரோக்கியமற்ற சூழலில் நாவலருக்கான சிலை வைத்து விடுவதால் மட்டும் நாவலரின் எண்ணங்கள் ஈடேறிவிடாது - என்றுள்ளது. (ஒ-4)

# முல்லைத்தீவில் மீண்டும் அதிகரிக்கும் கொரோனா

முல்லைத்தீவு, நவ.18

முல்லைத்தீவில் கொரோனாத் தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கை தற்போது அதிகரித்து வருகின்றது எனத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் கிடைக்கப் பெற்ற பி.சி.ஆர். மற்றும் அன்டிஜென் பரிசோதனையின் முடிவுகளின்படி, மாவட்டத்தில் புதிய தொற்றாளர்களாக 17 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதன்படி முள்ளியவளை மாமூலையில் ஒருவரும் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் மூவரும், வெலிஓயா பிரதேசத்தில் ஒருவரும், மாங்குளம் பிரதேசத்தில் இருவரும், ஐயன்கன்குளம் பிரதேசத்தில் இருவரும் மல்லாவி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 8 பேரும் என மாவட்டத்தில் 17 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-19)

# போலி இலக்கத்தகடுகள்; வவு.வில் இளைஞர் கைது



வவுனியா, நவ.18

வவுனியா - தாண்டிக்குளம் பகுதியில் நேற்றுமுன்தினம் விசேட அதிரடிப் படையினரால் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டு, பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

மோட்டார் சைக்கிள் மற்றும் வாகனங்களுக்கு போலி இலக்கத்தகடுகள் வடிவமைத்து வழங்கப்படுகின்றன என முல்லைத்தீவு விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலை அடுத்து, குறித்த பகுதியிலுள்ள வாகன இலக்கத்தகடுகள் வழங்கும் நிலையம் ஒன்றை விசேட அதிரடிப் படையினர் சுற்றிவளைத்து சோதனையிட்டனர்.

இதன்போது குறித்த நிலையத்தில் கடமையாற்றிய இளைஞர் ஒருவர் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அங்கிருந்த கணினி மற்றும் வாகன இலக்கதகடுகள் என்பனவும் கைப்பற்றப்பட்டு, வவுனியா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-18)

# நீரிழிவு நோய்க்கு உள்ளாவோர் எண்ணிக்கை யாழில் அதிகரிப்பு!

## மருத்துவர் ம.அரவிந்தன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், நவ. 18

யாழ்ப்பாணத்தில் நீரிழிவு நோய்க்குள்ளாகுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது என்று யாழ். போதனா மருத்துவமனையின் நீரிழிவுச் சிகிச்சை நிலையப் பொறுப்பு மருத்துவ அதிகாரி ம.அரவிந்தன் நேற்றுத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நீரிழிவு சிகிச்சை முகாமொன்று நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது. அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் மாவட்டத்தைப் பொறுத்தவரை தற்போது நீரிழிவு நோய் என்பது பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது. குறிப்பாக இளவயதினரும் இந்த நோயால் பாதிக்கப்படுகின்றனர். நீரிழிவு நோய்க்கு உள்ளாகுவோருக்கு ஏனைய பல நோய்களும் ஏற்படுவதற்கான சாத்தியங்கள் உள்ளன.

குறிப்பாக பாரிசவாதம் மற்றும் ஏனைய பல நோய்கள் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன. எனவே இளவயதினர் நீரிழிவு நோய் தொடர்பில் அவதானமாகச் செயற்பட வேண்டும். குறிப்பாக உடற்பயிற்சி மேற்கொள்ளவேண்டும். அல்லது தகுந்த வேளைகளில் நீரிழிவுப் பரிசோதனையை மேற்கொண்டு, ஆரம்பத்தில் இந்த நோயை இனங்காணும் பட்சத்தில் அந்த நோயைக் குணமாக்க முடியும் - என்றார். (ம)

## யாழ்.மாநகர ஆணையாளருக்கு கொரோனா

யாழ்ப்பாணம்,நவ.18

யாழ்ப்பாணம் மாநகரசபை ஆணையாளர் த.ஜெயசீலனுக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனையடுத்து அவர் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளார் என்று சுகாதாரத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

ஆணையாளருக்கு கொரோனாத் தொற்றுக்கான அறிகுறிகள் காணப்பட்டதை அடுத்து, மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதனையடுத்து ஆணையாளருடன் பணியாற்றும் 15 பேருக்கு அன்டிஜென் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனையும் மேற்கொள்ளப்படும் என்று சுகாதாரத் துறையினர் தெரிவித்துள்ளனர். (ஒ-4-26)

## தாதியர் கல்லூரியில் 13 பேருக்கு தொற்று

வவுனியா தாதியர் கல்லூரியில் 13 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

வவுனியா மாவட்டத்தில் கொரோனாத் தொற்று மீண்டும் அதிகரித்துவரும் நிலையில், தொற்றாளர்களுடன் தொடர்புடைய மற்றும் எழுமாறாக சில பகுதிகளில் அன்டிஜென் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அந்தவகையில், வவுனியா, தாதியர் கல்லூரியில் நேற்று 13 பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களுடன் தொடர்புடையவர்களையும் தனிமைப்படுத்த சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (த-18)

## நாடாளுமன்றில் சாணக்கியனின் பெயரை முகமது என்று கூறிய திலீபன் மூக்குடைபட்டார் சிறீதரனிடம்



கொழும்பு, நவ. 18

நாடாளுமன்றில், இரா. சாணக்கியனின் பெயரை, முகமது சாணக்கியன் என்று ஈ.பி.டி.பியின் திலீபன் உச்சரித்தமையால் சிறீதரன் எம்.பி கடும் கண்டனம் தெரிவித்தார். அவர் கூறியதை ஹன்சாட்டிலிருந்து நீக்குமாறும் சபாநாயகரிடம் கோரினார்.

சாணக்கியனின் பெயரை முகமது என்று திலீபன் மாற்றி அழைக்கின்றார் என்றால், திலீபன் கீழ்த்தரான நாடாளுமன்ற உறுப்பினர். சபையில் சாணக்கியனுடைய பெயரை மாற்றுவது என்பது சட்டதிட்டங்களுக்கு முரணானது. படிக்காத குறித்த நாடாளுமன்ற உறுப்பினரை முதலில் திருத்துவதற்கு முயற்சி செய்யுங்கள். - என்று சிறீதரன் சபாநாயகரின் கவனத்துக்குக் கொண்டு வந்தார். அதன் பின்னரும் திலீபன் தன்னைத்திருத்திக்கொள்ளாது கீழ்த்தரமான வார்த்தைகளையே கூறினார். (த)

## அமுத விழாவும் நூல் வெளியீடும்

சாவகச்சேரி, நவ.18

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் மூத்த உறுப்பினரும் மருத்துவருமான சு.சி.அருளானந்தத்தின் 80ஆவது வயது அமுத விழாவும் 'அருளானந்தம்' எனும் நூல் வெளியீடும் இடம்பெறவுள்ளது.

சாவகச்சேரி பிரதேச மக்களின் ஏற்பாட்டில், டிசெம்பர் மாதம் 4 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் இவ்விழா இடம்பெறவுள்ளது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் ஓய்வுநிலை அதிபர் அ.கயிலாய பிள்ளை தலைமையில் நடைபெறும் நிகழ்வில், மருத்துவரைக் கௌரவிக்கும் நிகழ்வும் அருளானந்தம் என்னும் நூல் வெளியீடும் இடம்பெறவுள்ளது. (ரி-19)

## யாழ்.மாநகர சபைக்குட்பட்ட வரியிறுப்பாளர்களுக்காக நாளை நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், நவ. 18

யாழ். மாநகர சபையின் வரியிறுப்பாளர்களின் நன்மை கருதி, பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்துக்கு அருகில் அமைந்துள்ள பொது நோக்கு மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3மணிவரை நடமாடும் சேவை நடைபெறவுள்ளது.

வட்டாரம் 02, 03 மற்றும் 07 ஆம் வட்டாரங்களுக்கான பெயர்மாற்ற விண்ணப்பிப்பு வம் வழங்கல், சைக்கிள் உரிமம் வழங்கல் போன்ற சேவைகளை வழங்குவதுடன் பொது மக்களால் இதுவரை காலமும் செலுத்தாதுள்ள சோலைவரி நிலுவைகள் மற்றும் நடப்பாண்டு சோலைவரி நிலுவைகள் மற்றும் நடப்பாண்டு சோலைவரி, தண்ணீர்வரி போன்றவற்றைச் செலுத்தி யாழ். மாநகர சபையின் அபிவிருத்தி நடவடிக்கைகளை துரிதப்படுத்த திட்டமிட்டுள்ளோம். தாங்களும் இந்தச் செயற்பாட்டில் இணைந்து சேவையை வழங்கி திட்டமிட்ட இலக்கை அடைய முழுமையான ஒத்துழைப்பை நல்குமாறு மாநகர முதல்வர் கேட்டுக்கொண்டுள்ளார். (த)

## தென்மராட்சியில் இறந்த மூதாட்டிக்கு கொரோனா இல்லை

கொடிகாமம், நவ. 18

கொரோனத்தொற்றுக் காரணமாக தனிமைப்படுத்தல் காலம் நிறைவடைந்த மூன்றாவது நாள் திடீர் சுகவீனமடைந்த தென்மராட்சி மூதாட்டி உயிரிழக்கக் காரணம், கொரோனா அல்ல இருதய நோயே என்று இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

மட்டுவில் தெற்கைச் சேர்ந்த குகதாசன் குணமணி (வயது - 73) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார். அவர் முன்னர் கொரோனத்தொற்றுக்கு உள்ளாகி தனிமைப்படுத்தப்பட்டிருந்தார். தனிமைப்படுத்தல் காலம் நிறைவடைந்த பின்னர் அவர் வீடு திரும்பியிருந்தார். அவ்வாறு வீடு திரும்பிய மூன்றாவது நாள் அவர் திடீரென்று சுகவீனமடைந்தார். அவர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்படும்வழியில் உயிரிழந்துவிட்டார். அவர் ஏற்கனவே இருதய நோய்க்கு உட்பட்டவர். இந்தநிலையில், அவரது இறப்புக்குக் காரணம், இருதய நோயே என்றும் தெரிவிக்கப்பட்டது. இறப்பு விசாரணையின் பின்னர் அவரது சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (த-159)

## தென்மராட்சியில் வலய மாணவிக்கு கொரோனா மூடப்பட்டது வகுப்பு

தென்மராட்சி கல்வி வலய பாடசாலை ஒன்றில், மாணவிக்கு கொரோனத்தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதனையடுத்து, அந்த மாணவி கல்விகற்ற வகுப்பு இடைநிறுத்தப்பட்டுள்ளது.

அந்த மாணவிக்கு மூன்று தினங்களுக்கு முன்னர் காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு மாணவிக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் மாணவிக்கு தொற்று உள்ளமை நேற்று உறுதிப்படுத்தப்பட்டது. அதனால் குறித்த பாடசாலையில், அந்த மாணவியின் வகுப்பு சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினரால் மறுஅறிவித்தல்வரை மூடப்பட்டது. (த-9)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## வெல்லட்டும் மக்கள்போர்!

**கோ**த்தாபய அரசின் எதேச்சாதிகாரப் போக்கையும், அரசின் திடமற்ற தூரநோக்கற்ற செயற்பாடுகள் மற்றும் முடிவுகளையும் கண்டித்தும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் தலைமையில் தலைநகர் கொழும்பில் மிகப்பெரும் ஆர்ப்பாட்டம் நடந்து முடிந்துள்ளது. அரசின் பல்வேறுபட்ட தடைகளை – நெருக்குவாரங்களைத் தகர்த்தெறிந்து முன்னெடுக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டம் பல்வேறுபட்ட தெளிவான பதில்களை இந்தத் தீவுக்கு வெளியிலும் அழுத்தம் திருத்தமாகச் சொல்லிநிற்கின்றது.

தேசத்தின் பாதுகாப்பையும், பொருளாதார மீட்சியையும் முதன்மைக் கொள்கைகளாகக் கொண்டு, ஆட்சிப் பீடமேறிய கோத்தாபய தரப்பு, இன்று தம் வாக்குறுதிகளை மறந்து அவற்றைக் காற்றில் பறக்கவிட்டுள்ளது. நாட்டின் வளங்கள் அந்நிய நாடுகளுக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளன. விலைவாசி, விண்ணை முட்டியுள்ளது.

அர்த்தமற்ற தன்மையுடன் நடைமுறைப்படுத்தப்பட்ட இயற்கை உர விவசாயக் கொள்கையால் இருப்பதையும் இழக்கும் நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். இவ்வாறு, அனைத்தும் ஒருமிக்கச் சேர்ந்து, வதைத்தெடுக்க, 'இனியும் பொறுக்க முடியாது' என்ற நிலையில்தான் கொரோனாப் பேரிடருக்கு மத்தியிலும் பல்லாயிரம் மக்கள் வீதிக்கு இறங்கியுள்ளனர்.

கோத்தாபய ராஜபக்ச ஓர் இராணுவ அதிகாரி. இராணுவச் சித்தாந்தம் கொண்டவர். மக்களுக்கான பாதுகாப்புக் கேடயமாக (?) அவரால் இருக்கமுடியுமே தவிர, ஒருபோதும் மக்கள் விரும்பும் ஜனநாயக ஆட்சியை அவரால் கொடுத்துவிட முடியாது. வெறுமனே தேசியப் பாதுகாப்பைக் காரணமாகக் கொண்டு, கோத்தாபயவை ஆட்சிக்குக் கொண்டுவந்தால், இருப்பதையும் இழக்கும் நிலை வரும் என்பது எதிர்வுகூறப்பட்டதே. அதைத் தற்போது இந்த மக்கள் பேரலை மெய்ப்பிதம் செய்துள்ளது. இதில் தமிழர்கள் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. வேண்டுமென்றால் தென்னிலங்கை வாக்காளர்களுக்கு இது அதிசயத்துக்கும் ஆச்சரியத்துக்கும் உரியதான விடயமாக இருக்கலாம்.

இறவாத இனவாதம்தான் இந்த நாட்டின் அரசியல். சகலதுறைகளிலும் தமக்கு ஏற்பட்டுள்ள இந்தப் பின்னடைவைச் சரிசெய்ய இனி அரச தரப்பு எடுக்கப்போகும் ஆயுதம் இனவாதம் ஒன்றேதான். இது எழுதப்படாத விதி. ஆனால், துரதிர்ஷ்டவசமாக இந்த இனவாதத் தீயுக்கு இரையாகிப்போகும் வாக்காளர்கள் தென்னிலங்கையில் மிகஅதிகம். இனவாதத்தால் ஆன பயன், அத்தியாவசியப் பொருள்களுக்கும், எரிபொருள்களுக்கும் வரிசையில் நின்றதைத்தவிர வேறொன்றும் இல்லை என்பதை இந்த வாக்காளர்கள் புரிந்துகொள்ள வேண்டும். இந்தப் புரிதல் வந்தாலே பாதிப்பிரச்சினை இல்லாமற் போய்விடும்.

இலங்கைத் தீவை மீட்டெடுக்கும் போரில் கட்சிகள், மதங்கள், இனங்களைக் கடந்து, யதார்த்தம் எதுவோ அதை நன்குணர்ந்து அனைவரும் ஒன்றிணைய வேண்டும். வெள்ளையர்களுக்குச் சிம்மசொப்பனமாக இருந்த முகாபே, ஐந்தல்ல பத்தல்ல கிட்டத்தட்ட 30 ஆண்டுகள் சிம்பாப்வேயை தொடர்ச்சியாக ஆட்சி செய்தார். முகாபேயின் ஆட்சிக்காலத்தில் நிலப்பிரபுத்துவக் கொள்கை, பண மதிப்பிழப்பு, வேலையின்மை, பொருளாதாரப் பின்னடைவு, அபிவிருத்தி வறட்சி, விவசாய உற்பத்தி வீழ்ச்சி என்று ஏகப்பட்ட சரிவுகளை சிம்பாப்வே எதிர்கொண்டது. எங்கும் ஊழல் – எதிலும் ஊழல். இதனால் பல போராட்டங்களை, ஆர்ப்பாட்டங்களை முகாபே எதிர்கொள்ள வேண்டியிருந்தது. எமர்சனிடம் ஆட்சி கைமாறுவதற்கு, தலைநகர் ஹராரே முதல் மூலை முடுக்கெங்கும் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட் டங்கள்தான் முக்கிய காரணமாக இருந்தன. முகாபேக்கே இந்த நிலையென்றால் கோத்தாபயவெல்லாம் எந்த மூலைக்கு? மக்கள்போர் வெல்லட்டும்.




# அரச – தனியார் கூட்டாண்மையில் பருத்தித்துறை துறைமுகம் அபிவிருத்தி

*ஆலோசனை முன்வைப்பு*



**கொழும்பு, நவ. 18**

**வடக்கில் பருத்தித்துறை உட்பட ஐந்து மீன்பிடித் துறைமுகங்கள் அமைக்கப்படவிருப்பதாகவும், தேவைப்படின் பருத்தித் துறைத் துறைமுகத்தை அரச - தனியார் கூட்டாண்மையின் கீழ் அபிவிருத்தி செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றுஇராஜாங்க அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.**

கடற்றொழில் அமைச்சின் ஆலோசனைக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு கூறினார்.

தற்பொழுது இடைநிறுத்தப்பட்டுள்ள பருத்தித்துறை மீன்பிடித் துறைமுக அபிவிருத்திப் பணிகளை விரைவில் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்தக் கூட்டத்தில் குறிப்பிட்டார். இந்தத் திட்டத்துக்கு நிதி உதவியளிக்கவிருந்த ஆசிய அபிவிருத்தி வங்கி, தனது உதவியை நிறுத்தியிருப்பதால், வேறு தரப்பினரின் உதவியைப் பெற்றுக் கொள்வது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டிருப்பதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

(ஒ-இ)

*கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ள*

# பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதே வரவு–செலவுத் திட்டத்தின் நோக்கம்

*பிரதமர் தெரிவிப்பு*

கொழும்பு, நவ. 18

கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதே இந்த முறை வரவு - செலவுத் திட்டத்தின் நோக்கம் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான உரையாடலிலேயே நேற்று முன்தினம் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

பல துறைகளின் சவால்களுக்கு மத்தியில் இந்த வரவு - செலவுத் திட்டம் ஒரு முக்கியமான தருணத்தில் சமர்ப்பிக்கப்பட்டது என்றே கூற வேண்டும். இது முக்கியமாக கொரோனா பாதிப்பில் இருந்து பொருளாதாரத்தை மீட்டெடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. நாம் முன்னெடுத்த செயற்பாடுகளின் ஊடாக பொருளாதாரத்தை விரைவில் இயல்பு நிலைக்குக் கொண்டு வரமுடியும் என நம்புகின்றோம். சுகாதாரம், கல்வி மற்றும் வறுமை ஒழிப்புக்காக, தொடர்ந்து மேற்கொண்டுள்ள முதலீடுகள், கொரோனாத் தொற்று நோய்க்கு மத்தியிலும் பொருளாதாரத்தின் இயக்கவியல் மற்றும் சவால்களை எதிர்கொள்ளும் திறனை நிரூபித்துள்ளன. வெளிநாட்டு வேலைவாய்ப்பை ஊக்குவிப்பதற்கும், வெளிநாட்டில் பணியாற்றுபவர்கள் அனுப்பும் பணத்தை வங்கி முறைக்கு ஈர்ப்பதற்கும் நாங்கள் மத்திய வங்கியுடன் இணைந்து பணியாற்றிவருகிறோம். பொருளாதாரம் ஒரு சவாலான காலகட்டத்தைக் கடந்து செல்வதை நாம் அறிவோம். இந்த வரவு - செலவுத் திட்டத்தில் முன் வைக்கப்பட்ட முன்மொழிவுகள் எதிர்காலத்திலும் அதற்குப் பின்னரும் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் என நாங்கள் நம்புகிறோம் - என்றார். (ம)

நவம்பர் 2021 **வடமாகாண மரநடுகை மாதம்**



"மரங்களின் பிரதான தொழிற்பாடுகள் புரிந்துகொள்ளப்பட்டு, அவை உயிர்வாழ் அங்கிகளாக எம்மால் உணரப்பட்டால், அவை எமக்கு ஆதாயமும் அகமகிழ்வும் தரக்கூடிய என்றும் முடிவில்லாத வளமாக விளங்கும்."

– நி.தி.மிரோவ்

# அமெ. - இலங்கை இடையே இருதரப்பு உறவு மீளாய்வு

## கொழும்பு வந்துள்ள பிரதி இராஜாங்க செயலர் தலைமையில் கலந்துரையாடல்

கொழும்பு, நவ. 18

**அமெரிக்க பிரதி உதவி இராஜாங்கச் செயலாளர் கெல்லி கெய்ட்லிங்குக்கும் இலங்கையின் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகேவுக்கும் இடையில் கடந்த திங்கட்கிழமை சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. இருதரப்பு உறவுகளை இருவரும் மீளாய்வு செய்துகொண்டனர் - என்று இந்தச் சந்திப்புத் தொடர்பில் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.**



கொரோனாத் தொற்று நோயை எதிர்த்துப் போராடுவதற்கும், எம்.வி. எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் இடரால் ஏற்பட்ட சுற்றுச்சூழல் மற்றும் சமூகப் பொருளாதாரத் தாக்கத்தைத் தணிப்பதற்கும் வழங்கப்பட்ட தொடர்ச்சியான உதவிகளுக்காக வெளியுறவுச் செயலாளர் அமெரிக்க அரசுக்கும், அமெரிக்க மக்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்தார். அமெரிக்க இலங்கை கூட்டாண்மை உரையாடலை ஒன்றுகூட்டுதல் உட்பட இரு நாடுகளுக்குமிடையில் நடைபெற்று வரும் இருதரப்பு முயற்சிகளை வெளிவிவகார அமைச்சின் செயலாளரும், அமெரிக்க பிரதி உதவி இராஜாங்கச் செயலாளரும் மீளாய்வு செய்தனர். (ம)

## கொரோனாத் தடுப்பூசி பெற மாணவர்களுக்கு மீள வாய்ப்பு



சாவகச்சேரி.நவ.18

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் கொரோனாத் தடுப்பூசி பெற்றுக்கொள்ளாத மாணவர்களுக்கு மீண்டும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தால் கடந்த 21 ஆம் திகதி தொடக்கம் 16 - 19 வயதுக்கும் இடைப்பட்ட மாணவர்களுக்கு பாடசாலை ரீதியாக பைஸர் தடுப்பூசி ஏற்றப்பட்டது.

எனினும் தடுப்பூசி ஏற்றிக்கொள்ளாத மாணவர்களுக்கு நேற்று வரை சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. இதனையடுத்து தடுப்பூசி ஏற்றியமைக்கான அட்டையின்றி வரும் மாணவர்களை வகுப்புக்குள் நுழைய அனுமதிக்க வேண்டாம் என்று அதிபர்கள் வகுப்பாசிரியர்களுக்கு அறிவித்திருந்தனர்.

இதனையடுத்து தடுப்பூசி ஏற்றிக்கொள்ளாத மாணவர்கள் தமது பெற்றோருடன் சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்துக்குச்சென்று, நேற்று தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டனர்.

அதனால் தடுப்பூசி ஏற்றிக் கொள்ளாத மாணவர்கள் நாளை மறுதினம் சனிக்கிழமையும் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று சுகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர். (ஒ-4-9)

## கால் போத்தல் மதுவுக்கு தடை

கொழும்பு,நவ.18

கால் போத்தல் அளவிலான மதுபானம் தயாரிப்பதை தடை செய்யுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு, சாதகமானபதில் கிடைத்துள்ளது என்று புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகார சபையின் தலைவர் மருத்துவர் சமாதி ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

புகையிலை மற்றும் மதுபான அதிகார சபை நடத்திய ஆய்வொன்றில், 72 வீதமானவர்கள் கால் போத்தல் மதுபானத்தைத் தடை செய்ய வேண்டும் என்ற கருத்தை முன்வைத்தனர்.

மூன்று பிரிவுகளின் கீழ் நடத்தப்பட்ட ஆய்வுகளுக்கு அமைவாக, கால் போத்தல் மதுபானம் தயாரிப்பதைத் தடைசெய்ய வேண்டும் என்று அரசிடம் கோரிக்கை விடுத்தோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-4)

## இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்க 'ஜெய்க்கா' தீர்மானம்



கொழும்பு, நவ. 18

இலங்கையின் சமூகப் பொருளாதார அபிவிருத்திக்கான தமது ஒத்துழைப்பை வழங்குவதாக, ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் (ஜெய்க்கா) தென்னாசிய வலயப் பணிப்பாளர் நாயகம் சக்கமொட்டோ டக்கேமா, ஜனாதிபதி கோத்தாபயவிடம் தெரிவித்தார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளராகதான் இருந்த போது, 'ஜெய்க்கா' நிறுவனத்துடன் ஒன்றிணைந்து பல அபிவிருத்தி வேலைத்திட்டங்களைச் சிறப்பாக நடைமுறைப்படுத்த முடியுமாக இருந்ததென, ஜனாதிபதி இதன்போது நினைவு கூர்ந்தார்.

1965ஆம் ஆண்டு முதல், இலங்கையின் 120 அபிவிருத்தித் திட்டங்களுக்காக ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் தனது பங்களிப்புக்களை வழங்கியுள்ளது. கடன் அபிவிருத்தித் திட்ட உதவிகள், அபிவிருத்தித் திட்டமல்லாத உதவிகள் உள்ளிட்ட பல்வேறு கடன் நிதியுதவிகளுக்காக, அந்த நிறுவனத்தினால் 8 ஆயிரத்து 829 மில்லியன் அமெரிக்க டொலர் செலவிடப்பட்டுள்ளன. (ம)

## மரக்கறிகளின் விலை கிடுகிடுவென அதிகரிப்பு

மன்னார்,நவ.18

நாடளாவிய ரீதியில் மரக்கறிகளின் விலை அதிகரித்துள்ள நிலையில், மன்னார் மாவட்டத்திலும் மரக்கறிகளின் விலை கிடுகிடுவென அதிகரித்துள்ளது.

இதனால் மரக்கறிகளின் கொள்வனவு குறைவடைந்துள்ளது. விற்பனையாளர்களும் வியாபாரம் இன்றி பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஒரு கிலோ கரட் 380 ரூபா, லீக்ஸ் 340 ரூபா, கத்தரிக்காய் 350 ரூபா, கறிமிளகாய் 480 ரூபா, பெரிய வெங்காயம் 240 ரூபா, தக்காளி 500 ரூபா, போஞ்சி 450 ரூபா என்ற ரீதியில் விற்பனை செய்யப்படுகின்றது. (ஒ,4-56)



## பாடசாலை மைதான சீரமைப்பு ஆரம்பம்

கொடிகாமம், நவ.18

வரணி மத்திய கல்லூரியின் புனரமைப்புக்கு அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பாடசாலை அதிபர் ப.செல்வவிநாயகம் தலைமையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் அங்கஜன் இராமநாதனின் பிரத்தியேக செயலாளரும், கரவெட்டி பிரதேசசபை உறுப்பினருமான ச. இராமநாதன் கலந்துகொண்டு அடிக்கல்லை நட்டு வைத்தார்.

நிகழ்வில் தென்மராட்சிக் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் காண்டீபன்,சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர், மாவட்ட அபிவிருத்திக் குழு அலுவலக உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-159)

# கொரோனாவுடன் இணைந்து அரசை ஒழிக்க முயற்சியாம்

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 18

அரசாங்கத்துடன் இணைந்து கொரோனா வைரஸை ஒழிப்பதற்குப் பதிலாக, கொரோனா வைரஸுடன் இணைந்து அரசாங்கத்தை ஒழித்துகட்டவே எதிர்க்கட்சியினர் முயற்சிக்கின்றனர் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர குற்றஞ்சுமத்தினார்.

வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான நேற்றுமுன்தின விவாதத்தில் கலந்துகொண்டு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவின் குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளித்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாட்டையும், நாட்டு மக்களையும் தவறாக வழிநடத்துகிறார். நாட்டின் தற்போதைய நிலைமையில் எதிர்க்கட்சியானது அரசாங்கத்துடன் இணைந்து, கொரோனா வைரஸை ஒழிக்க வேண்டும். ஆனால் எதிர்க்கட்சி கொரோனா வைரஸுடன் இணைந்து அரசாங்கத்தை ஒழித்துகட்டவே பார்க்கிறது.

சட்டம், ஒழுங்கை பாதுகாக்கவே பொலிஸார் இருக்கிறார்கள். போராட்டங்களால் கொரோனா வைரஸ் பரவும் என சுகாதாரத் தரப்பினர் கூறும்போது அதனைத் தடுப்பது பொலிஸாரின் கடமை. பொலிஸார் அதனையே செய்கிறார்கள். அதில் பிரச்சினை இருக்குமாக இருந்தால், அது தொடர்பில் முறைப்பாடு செய்யுங்கள். அதனை நாம் விசாரிக்கிறோம் - என்றார். (ம)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** நம்பியவர்கள் உதவிக்கரமாக இருப்பார்கள். பண வரவு உண்டு. நிதி வளர்ச்சி பற்றி இருந்த பயங்கள் அகலும். சிந்தனைகள் கூடும். மனதில் சந்தோஷம் குடிகொள்ளும். குழந்தைகள் உங்கள்மீது பாசமாக இருப்பர்.

**இடபம்:** நீண்டநாள் திட்டங்கள் நிறைவேறும். நண்பர்களைச் சந்திப்பீர்கள். உடல்நலம் மேம்படும். பலரைச் சந்தித்து உற்சாகம் அடைவீர்கள். மனதில் இருந்து வந்த பயங்கள் அகலும்.

**மிதுனம் :** சங்கடங்கள் நீங்கும். எதிர்பாராத விரயங்கள் குறையும். கவலைகள் குறையும். குழந்தைகளால் சந்தோஷம் ஏற்படும். உடல் ஆரோக்கியத்தில் கவனமாக இருக்க வேண்டும்.

**கடகம்:** புதிய பொருள் வாங்குவது பற்றிய எண்ணம் நிறைவேறும். கடன் பிரச்சினை பற்றி குடும்பத்தினருடன் வாக்குவாதம் செய்ய வேண்டாம். குழந்தைகளின் வாழ்வு மேம்படும். குடும்ப விழா களைகட்டும்.

**சிம்மம்:** நிதானத்துடன் செயற்பட வேண்டிய நாள். கற்பனை பயம் இருக்கும். பணியாளர்களின் விருப்பம் நிறைவேறும். மகிழ்ச்சி அதிகரிக்கும். புதிய நபர்களிடம் பழகும்போது சற்று கவனமாக இருங்கள்.

**கன்னி:** உடல் நலனுக்கு ஒவ்வாத உணவுகளை தவிர்க்கவும். அறிமுகம் இல்லாதவர்களிடம் எதையும் பகிர்ந்து கொள்ளவேண்டாம். பேச்சினால் வம்பில் மாட்டாமல் கவனமாக விலகுவீர்கள்.

**துலாம்** பணியிடத்தில் உங்களின் புகழ் கூடும். இனிய செய்தி ஒன்று வரும். உறவினரைத் தொடர்புகொள்வதால் நன்மை நடைபெறும். வேலைகள் விரைந்து முடியும். பலநாள் ஆசை ஒன்று நிறைவேறும்.

**விருச்சிகம்:** கல்வி பற்றிய திட்டம் வெற்றி பெறும். கடன் பிரச்சினை தீரும். குழந்தைகள் உங்கள் நலனில் ஆர்வம் காட்டுவார்கள். உற்சாகத்தை அதிகரிக்கும் சம்பவங்கள் இன்று நடைபெறும்.

**தனுசு:** அனுபவம் மிக்கவரின் ஆலோசனை கிடைக்கும். வாழ்வு மேம்படும். நினைத்தது நிறைவேறும். பணியிடத்தில் இருந்த போட்டி விலகும். நண்பர்களின் உதவி பயன்மிக்கதாக இருக்கும்.


**மகரம்:** பழைய வாகனத்தை மாற்றி புதிதாக வாங்க வாய்ப்புள்ளது. வரவு–செலவு ஏற்ற இறக்கத்துடன் இருந்தாலும் சந்தோஷம் உண்டு. புதிய ஆடை, நகைகள் வாங்கும் முயற்சி இன்று நிறைவேறும்.

**கும்பம்:** பழைய தவறுகளுக்கு வருந்தி உங்களை மாற்றிக் கொள்வீர்கள். மின்னணு சாதனம் ஒன்றை வாங்கி சந்தோஷப்படுவீர்கள். உங்களுக்கு கிடைக்க வேண்டிய அங்கீகாரம் கிடைக்கும்.

**மீனம்:** சுப முயற்சிகள் தள்ளிப்போவது பற்றி கவலைப்படவேண்டாம். பணி பற்றி இருந்து வந்த மனக்குழப்பம் தீரும். நட்பு வட்டம் விரியும். நண்பர்களால் நல்ல விடயம் ஒன்று நடைபெற்று உங்களை மகிழ்விக்கும்.

# குருப்பெயர்ச்சி பலன்கள்

## 2021 -2022



குரு பார்க்க கோடி நன்மை என்று கூறுவார்கள். நவக்கிரகங்களில் சுபக் கிரகமாக விளங்கும் குரு பகவான் பெயர்ச்சியாகும் பொழுது அனைத்து ராசியினருக்கும் நற்பலன்களை வழங்குவார். குருபகவான் நேர்கதியில் **நவம்பர் 13ஆம் திகதி** மகர ராசியில் இருந்து கும்ப ராசிக்கு பெயர்ச்சி ஆகியுள்ளார். மகரம், கும்பம், மீனம் ஆகிய ராசிகளில் பயணம் செய்ய இருக்கும் குருபகவான் 2022ஆம் ஆண்டு என்ன செய்ய இருக்கிறார்? அதனால் 12 ராசிக்காரர்களுக்கும் கிடைக்கப் போகும் பலன்கள் என்னென்ன? என்பதைப் பார்ப்போம்.

## கன்னி



கலகலப்பான பேச்சால் எல்லோரையும் அரவணைத்துச் செல்லும் கன்னி ராசி அன்பர்களே! இந்த குருப்பெயர்ச்சி எப்படிப்பட்ட மாற்றங்களை உங்களுக்குத் தரும் என்பதைப் பார்ப்போம்.

இதுவரை உங்கள் பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் அமர்ந்து நற்பலன்களை வழங்கிவந்த குருபகவான், இப்போது ஆறாம் வீடான கும்பத்தில் அடி எடுத்து வைக்க இருக்கிறார். ஆறாம் வீடு என்பது அத்தனை உகந்த இடம் அல்ல. நற்பலன்கள் கிடைக்காது என்று கவலைப்படுகிறீர்களா…? சகட குரு சங்கடங்கள் தருவார் என்று வருந்துகிறீர்களா? அந்த வருத்தமே தேவையில்லை. குருபகவான் தன் பார்வைப் பலத்தால் சில அதிர்ஷ்டங்களையும் உங்களுக்கு வாரி வழங்குவார்.

குருபகவான் இரண்டாம் இடமான தன குடும்ப வாக்குஸ்தானத்தைப் பார்ப்பதால் பேச்சில் ஒரு தெளிவு பிறக்கும். குடும்பத்தில் அமைதி நிலைக்கும். கணவன் மனைவிக்கிடையே இருந்த பிரச்னைகள் தீர்ந்து இல்லறம் நல்லறமாகும். குருபகவான் உங்களின் 10ஆம் வீடான மிதுனத்தைப் பார்ப்பதால் புதிய வேலை கிடைக்கும். கௌரவப் பதவிகள் தேடிவரும். உங்களின் சொல்வாக்கும் செல்வாக்கும் உயரும். பதவியுயர்வு தேடிவரும். பணவரவும் அதிகரிக்கும். குருபகவானின் பார்வை சிம்மராசியின் மீது படுவதால் வீண் செலவுகளை எல்லாம் கட்டுப்படுத்துவீர்கள். மகன் கல்விக்காகச் செலவு செய்வீர்கள். வீட்டில் சுபநிகழ்ச்சிகள் நடைபெறும். விட்டுப்போன பணிகளை எடுத்துச் செய்யும் நிலைவரும்.

### 13.11.2021 முதல் 30.12.2021 வரை

இந்தக் காலகட்டத்தில் குருபகவான் அவிட்ட நட்சத்திரத்தில் சஞ்சாரம் செய்வதால் தேவையற்ற கோபம், செலவு ஆகியன ஏற்படும். சகோதரர்களால் சங்கடங்கள் உண்டாகும். உடல் ஆரோக்கியத்திலும் அக்கறை செலுத்துங்கள். முன்பின் தெரியாதவர்களை நம்பி எதிலும் இறங்க வேண்டாம். பயணத்தின்போதும் உரிய கவனம் தேவை.

### 31.12.2021 முதல் 02.03.2022 வரை

குருபகவான் சதயம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் இந்தக்காலகட்டத்தில் தெளிவாக முடிவெடுக்க முடியாமல் திண்டாடுவீர்கள். பரம்பரைச் சொத்தை விற்கும் நிலை ஏற்படலாம். பிள்ளைகளின் படிப்பில் கவனம் செலுத்துங்கள். அவர்களின் நட்பு வட்டத்தைக் கண்காணியுங்கள். கர்ப்பிணிகள் இரவு நேரப் பயணங்களைத் தவிர்ப்பது நல்லது.

### 02.03.2022 முதல் 13.04.2022 வரை

குருபகவான் தனது நட்சத்திரமான பூரட்டாதியில் சஞ்சாரம் செய்யும் இந்தக் காலகட்டத்தில் வாழ்க்கைத்துணையோடு அனுசரித்துச் செல்லுங்கள். எதற்கெடுத்தாலும் சண்டைக்குச் செல்லாதீர்கள். யாரிடமும் அவர்களை விட்டுக்கொடுத்துப் பேச வேண்டாம்.

வாழ்க்கைத்துணையின் ஆரோக்கியத்திலும் கவனம் செலுத்துங்கள். காதுபடவே சிலர் உங்களைக் குறித்து அவதூறு பேசுவார்கள். அதை எல்லாம் கண்டும் காணாமலும் விடுங்கள். வெளிப்படையாக யாரையும் விமர்சிக்க வேண்டாம். பணியிடத்தில் இடமாற்றம் இருந்துகொண்டேயிருக்கும்.

பணிச்சுமை அதிகரிக்கும். ஆனால், மேலதிகாரிகள் உங்களை மனம் திறந்து பாராட்டுவார்கள். மொத்தத்தில் இந்த குருப்பெயர்ச்சி உங்களை அலைகழித்தாலும் மறைமுக வெற்றியையும் பல முக்கியமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதாகவும் அமையும்.

# கார்த்திகை விளக்கீடு

எம்.பி.அருளானந்தம்

கார்த்திகை மாதத்தில் கார்த்திகை நட்சத்திரத்தில் கொண்டாடப்படுவது திருக்கார்த்திகை தீப தரிசன வழிபாடு. கார்த்திகை நட்சத்திரத்துக்கு முன்னர், பரணியும் பின்னர் ரோகிணியும் வருவதுண்டு. கார்த்திகை மாதப் பூரணை சில காலத்தில் கார்த்திகை நட்சத்திரத்துடனும் சில வேளைகளில் பரணியோடும், சில சமயம் ரோகிணியுடனும் கூடிவரும். இவற்றுள் கார்த்திகையுடன் பௌர்ணமி சேர்ந்தால் அது பத்மயோகம் எனப்படும். ரோகிணி நட்சத்திரத்தோடு சேர்ந்து வந்தால் அது மகா கார்த்திகை என்றழைக்கப்படும். இந்தப் புண்ணிய நாள் திருக்கார்த்திகை விரதம், கார்த்திகை விளக்கீடு, கார்த்திகை தீபம் என்றெல்லாம் அழைக்கப்படும்.

### திருக்கார்த்திகை தீபதரிசனம்

திருக்கார்த்திகைத் தீப உற்சவம் வீடுகளிலும், எல்லாத் திருக்கோயில்களிலும் பெரும் விழாவாக நிகழும். இந்து ஆலயங்களிலும், இல்லங்களிலும் நடைபெறும் தீபோற்சவ விழாவை சர்வாலய தீபம் என்று கூறுவர். திருக்கார்த்திகை விரத தினத்தில் முருகன் கோயில்களில் நடைபெறுவதைக் குமாராலாய தீபம் என்றும் கூறுவர். திருமாலுக்கு தீபோற்சவ விழா எடுப்பதை விஷ்ணுவாலய தீபம் என்று அழைப்பர்.

### சுட்கப்பனை

இந்தத் திருக்கார்த்திகை உற்சவத்தைக் குறிக்கும் பொருட்டு தீபங்களைக் கொண்டு உயரமாகக் கட்டப்பட்டிருக்கும் 'சொக்கப்பானை' யை எரிப்பது வழக்கம். சொக்கப்பானை என்றோ சொர்க்கப்பானை என்றோ கூறுவது மரபல்ல. 'சுட்கப்பனை' என்ற சொல்லு திரிபு பெற்று சொக்கப்பானை என்று வழங்கப்படுகிறது. 'சுட்கம்' என்பது வறட்சி.

உலர்ந்த தென்னை, பனை, கமுகு, வாழை இவற்றின் தண்டினைத் தீப தண்டமாகக் கோயில் சந்நிதானத்தில் நட்டு உயர்ந்த பனையோலை முதலியவற்றால் விமானம் போல உயரமாக மூடிக்கட்டிய சொக்கப்பானை எனப்படும் சுட்கப்பனையில் தீ மூட்டி, அது சுவாலித்து எரியும் போது சோதி சொரூபமாகவும் திருவண்ணாமலைத் தீபமாகவும் பாவித்து பக்தர்கள் வழிபடுவர். திருவண்ணாமலையில்தான் இந்த மகோற்சவம் புராதன காலந்தொட்டுச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

### திருவண்ணாமலைத் தீப தரிசனக் காட்சி

'அண்ணாமலை தொழுவார் வினை வழுவா வண்ணம் அறுமே' என்கிறார் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார். திருப்புகழ் என்ற அமுதத்தை வாரி வழங்கிய அருணகிரிநாதர் பிறந்து வளர்ந்ததும், எல்லாள மகாராஜன் கட்டிய கோபுரத்திலிருந்து குதித்தபோது ஆறுமுகப் பெருமானின் திருக்கரத்தால் தாங்கி, பாடத் தொடங்கியதும் திருவண்ணாமலையில் தான். இந்தத் திருவண்ணாமலையிலுள்ள தீப தரிசனக் காட்சியைப் பக்தர்கள் 'அண்ணாமலையானுக்கு அரோகரா' என்ற அருள் முழக்கத்தோடு பல மைல்களுக்கு அப்பால் நின்று தரிசித்து பரவசமடைவார்கள். இத்தகு மகத்துவச் சிறப்புக்களைக் கொண்ட திருக்கார்த்திகை சர்வாலய தீப தரிசனமாக இந்துப் பெருமக்களால் இன்று கொண்டாடப்படுகிறது.





# அறப்பணிகளால் உருப்பெற்ற கீரிமலை சிவபூமி முதியோர் ஆச்சிரமம்!

**இன்று திறப்புவிழா**

**கலாநிதி.மகேஸ்வரக் குருக்கள்**
பாலகைலாசநாதசர்மா
தலைவர், சமஸ்கிருதத்துறை
இந்து கற்கைகள்பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

வைதீக சைவத்தின் காவலர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் இருநூறாவது நினைவு ஆண்டை அண்மிக்கும் இந்தக்காலத்தில் கீரிமலை சிவபூமி முதியோர் ஆச்சிரமம் இன்று (18.11.2021) கோலாகலமாக திறப்பு விழா செய்யப்பெற்று முதியோர்களிடம் கையளிக்கின்ற அறம் தொடர்கின்றது. நாவலர் பணி மரபிலே வருகின்ற ஒரு விடிவெள்ளியாக நம்மிடையே, இக் காலத்தில் தமிழ்ச்சைவ அறப்பணிக்காவலராக திகழ்பவர் கலாநிதி. ஆறு. திருமுருகன். சொல்லாற்றலால் செஞ்சொற்செல்வர் என்று அனைவராலும் சிறப்பிக்கப்படும் சர்வதேச புகழ்பூத்த சொற்பொழிவாளர். அவர் உலகமெங்கும் சென்று தம் சொல்லாளுமையால் சொற்பொழிவாற்றி, சைவநற்பணியை ஆற்றிவரும் நல்லாசிரியரும் ஆவார்.

சிவத்தமிழ்ச் செல்வியின் வழியில் பயணித்து தெல்லிநகர் துர்க்கையம்பாள் பேராலய அறங்காவலர் சபைத் தலைவராக நீண்டகாலமாக இருந்து, இந்த ஆலயத்தை மற்றைய ஆலயங்களுக்கு முன்னோடியாக விளங்கச்செய்து ஆலயத்தை சமய சமூக பண்பாட்டில் முதல்நிலைப்படுத்தி வருகின்றவர் ஆறு. திருமுகன். அகில இலங்கை இந்துமாமன்றத்தின் உபதலைவராகவும் பிராந்திய இயக்குநராகவும் செயற்படுவதோடு எண்ணற்ற பணிகளை தோளில் தாங்கி எம் எல்லோருடனும் பொறுப்புடன் அவர் பணியாற்றுகின்றார். சரியானதைத் துணிந்து சொல்லும் ஆளுமை மட்டுமன்றி செயலில் பெரும் வீரராகச் செயற்பட்டு தீர்மானங்களைச் சரியான பாதையில் நடைமுறைப்படுத்துகின்றார்.

ஆறு. திருமுருகனின் எண்ணத்தின் வண்ணமான சிவபூமி அறக்கட்டளை நிதியம், அறக்கட்டளை சட்டத்தின் 114 ஆம் சரத்துக்கமைய கூட்டமைக்கப்பட்ட நிறுவனமாக இலங்கை அரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கச் செய்து பல அறக்கட்டளைகளை முன்னெடுத்துச்செல்கிறார் ஆறு. திருமுருகன். கோண்டாவில் சிவபூமி மனவிருத்திப் பாடசாலை, சுழிபுரம் சிவபூமி முதியோர் இல்லம், கீரிமலை சிவபூமி மடம், குப்பிளான் சிவபூமிஞான ஆச்சிரமம், கீரிமலை



சிவபூமி யாத்திரிகர் விடுதி, கோண்டாவில் சிவபூமி வாழ்வாதார நிதியம், கீரிமலை சிவபூமி கலைக்களஞ்சியம், கோண்டாவில் சிவபூமி மருத்துவ நிதியம், கிளிநொச்சி சிவபூமி மனவிருத்திப் பாடசாலை, இயக்கச்சி சிவபூமிகோட்டம், கோண்டாவில் சிவபூமி கல்விநிதியம், திருகோணமலை சிவபூமி மனவிருத்திப்பாடசாலை, கோண்டாவில் சிவபூமி தொழிற்பயிற்சிப் பாடசாலை, திருகோணமலை சிவபூமிமடம், நாவற்குழி சிவபூமி திருவாசக அரண்மனை, கந்தபுராண ஆச்சிரமம், அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட திருக்குறள் அரண்மனை, திருமந்திர அரண்மனை என்று குறித்தஅறக்கட்டளைப்பணிகள் தொடர்ந்த வண்ணமாக இருக்கின்றன.

இந்த அறக்கட்டளைக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அன்பர்கள் நிதி வழங்க அவற்றை முறையாகப் பெற்றுச் சரியாகத் திட்டமிட்டு தூரநோக்கோடு ஆறு. திருமுருகன் தாம் சைவப்பணிகளை திறம்பட நீண்ட நோக்கோடு செய்து வருகின்றார்.

ஈழத்தின் காசி என்று கொண்டாடப்படும் புகழ்பெற்ற நகுலேஸ்வரலாயத்துக்கு அண்மையிலும் சிவபூமி முதியோர் ஆச்சிரமம் உருவாகி, திறப்பு விழாக் காண்கின்ற செயல் தமிழ் சைவ உலகுக்கு பெரும் வரப்பிரசாதமாக அமைவதோடு கலாநிதி ஆறு. திருமுருகனின் பணிகள் சிறக்க இறைவன் அருள்வேண்டுமென பிரார்த்திப்பதோடு, இந்தப் பணிகளை அறிவதும் உணர்வதும் அவை இன்னும் பொலிவுடன் திகழ உதவுவது நம் அனைவரின் கடமையாகும்.

# தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் நினைவுகூரலின் தேவை என்ன?

**அருட்பணி கி. ஜோ. ஜெயக்குமார்**

கடந்த சில தினங்களாக வடக்கு- கிழக்கு ஆயர்கள் விடுத்த கார்த்திகைத் திங்கள் 20ஆம் நாள் நினைவுகூரல் விடயமாக பல தரப்புக்களிலிருந்து விமர்சனங்கள், வாபஸ்பெறக்கோரிக்கைகள், பத்திரிகைகளிலும், சமூக ஊடகங்களிலும் வந்து கொண்டிருப்பது நாம் அறிந்த விடயம். கவலைக்குரியதுமாகும். நினைவுகூரல் என்பது ஒரு உரிமையாகும். வரலாற்றில் நினைவுகூரலின் அடையாளமாக எகிப்திய பிரமிட்டுகள், அரசர்களின் சிலைகள், இத்தலியிலுள்ள 'கற்ற கூம்ஸ்' என அழைக்கப்படும் கல்லறைகள் எனப் பல உதாரணங்கள் முன்வைக்கப்படுகின்றன.

எல்லா மதங்களிலும் "நினைவுகூரலுக்கான சடங்குகள், நாள்கள் கடைப்பிடிக்கப்படுகின்றன. இந்து மக்கள் ஆடி அமாவாசை, சித்திரா பௌர்ணமி என்றும், கத்தோலிக்கர்கள் நவம்பர் மாதத்தை சகல ஆத்துமாக்களின் மாதமென்றும் நினைவு கூர்ந்துவருகின்றனர். பல நூற்றாண்டுகளாக மத நினைவு கூரல் இடம்பெற்றுவருகின்றது.

தமிழ் மக்களின் விடுதலைக்கான ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட பல இயக்கங்கள் வெவ்வேறு தினங்களில் தம் சக போராளிகளை நினைவுகூருகின்றனர். பல்வேறு பெயர்களில் வீரமக்கள் தினம், தியாகிகள் தினம், மாவீரர் தினம் என அழைக்கப்பட்டு நினைவு கூருகின்றார்கள். இன்னும் முள்ளிவாய்க்கால் கூட்டு நினைவுகூரல் என கூட்டழிப்பின் பின்னரான காலப்பகுதியில் அனைத்து தமிழ் மக்களால் நினைவு கூரப்படுகின்றது.

எனவே தமிழ்மக்களிடையே போராட்டத்தை தொடர்ந்து போரில் இறந்தவர்களை நினைவு கூரல் என்பது பல் வகைமையைக் கொண்டதாக காணப்படுகிறது.

ஆயர்கள், கத்தோலிக்க நோக்கிலிருந்து, கார்த்திகை மாதமாகிய சகல ஆத்மாக்களின் மாதத்தில் போரில் இறந்த அனைவரையும் விசேடமாக நினைவு கூர்ந்து செபிக்கும்படி 20 ஆம் திகதியை நிர்ணயித்து கத்தோலிக்கர்களுக்கு அழைப்புவிடுத்தனர். போரில் இறந்தவர்களை நினைவுகூரல் பல்வேறு தினங்களில் தமிழ் மக்களிடையே நடைபெற்றாலும், தமிழர்களுக்கு இப்போது தேவைப்படுவது ஈழத்தமிழினத்தின் கூட்டழிப்பின் நினைவுகூரலுக்கான ஒரு பொதுப்படிமம் (ICON). ஒரு பொதுப்படிமம் கட்டமைக்கப்படவேண்டியது காலத்தின் அவசியமாகும்.

படிமம் கட்டமைக்கப்படுவதனூடாக நோக்கம், அதனைச் சுற்றிய அணிதிரட்டலின் இயங்குதலை, தமிழினத்தின் இன்றைய அடக்குமுறை எதிர்ப்புக்கான சக்தியாக மாற்றுவதேயாகும். இதுவே நினைவுகூரலின் இன்றைய தேவையாகும். பண்பாட்டில் படிமவியல் இன்றியமையாதது. வடக்கு - கிழக்கு ஆயர்கள் கடந்த மே மாதம், முள்ளிவாய்க்காலில் நடைபெற்றது 'இனப்படுகொலை' என்று அறிவித்தமை, இனப்படுகொலையின் நினைவுகூரலின் படிமம் ஒன்றின் அவசியத்தை எமக்கு வலியுறுத்துகின்றது. யூத இனப்படுகொலை மறுப்பு தீவிரமடைந்த போது 2012 இல் யூத ஓவியர் மோஷாக் லின் என்பவர் வரைந்த "வோர்சோ பையனின் " ஓவியம் சிறந்தவொரு படிமமாகக் கருதப்படுகின்றது. இந்தப்படிமத்தில் மூன்று நாசிப்படை வீரர்கள் துப்பாக்கி ஏந்தி, யூதச் சிறுவன் மீது குறிவைப்பதையும் அந்தச்சிறுவன் கையை உயர்த்தி நிற்பதுவும் காண்பிக்கப்பட்டது.



இந்தப்படிமம் யூத இனப்படுகொலைக்கு நீதி கோரியதாகவும், சாட்சியமில்லாது ஒருதலைமுறையிலிருந்து மற்றைய தலைமுறைக்கு யூதப்படுகொலையை கடத்துவதாகவும் பொருள் கொள்ளப்பட்டது. தமிழ் மக்களாகிய நாம் கூட்டு நினைவுகூரலுக்கான பொதுப்படிமத்தை கட்டமைத்து அதனை தமிழ் மக்களின் அடக்குமுறைக்கு எதிரான சக்தியாக மாற்றவேண்டும். அத்துடன், அப்படிமம், தாயகம், புலம்பெயர், தமிழ் மக்கள் அனைவரையும் ஒன்றுசேர்க்கும் ஒருபுள்ளியாகவும், இனஅழிப்புக்கு எதிரான நீதி கோரும் ஒன்றாக மாற்றுவதே காலத்தின் தேவையாகும். இதுவே நினைவுகூரலின் நோக்கமாகும்.

மாதகலில்....

நிலஅளவை திணைக்களத்தினர் திரும்பிச்செல்ல முயன்றனர். அந்தநேரம், குறித்த படைப்பிரிவுக்கான கட்டளைத்தளபதி, பேச்சு நடத்தி, இதனைத் தீர்க்கலாம் என்றும் நிலஅளவைத் திணைக்களத்தி னரை அளவிட அனுமதிக்குமாறும் கேட்டார்.

எனினும், மக்கள் எதிர்ப்புத் தெரிவித்ததோடு எதிர்ப்பை வெளிப்படுத்தும் முகமாக கடிதம் ஒன்றையும் நிலஅளவை திணைக்களத்தினரிடம் ஒப்படைத்தனர்.

## சேர்த்து வாசிக்கவும்

மைத்துனர்-P.J அன்ரனி (சட்டத்தரணி J.P- சமாதான நீதவான்). 10 ஆம் பக்கத்தில் சங்கரப்பிள்ளை பாக்கியம் அவர்களின் மரண அறிவித்தலில் மேற்குறிப்பிட்ட பெயரை இணைத்து வாசிக்கவும்.

(CS 18073) 1-6 தகவல் : குடும்பத்தினர்.

இதனையடுத்து கடற்படைத்தளபதி பிரதேச செயலர் மூலம் அனைத்து தரப்பினரையும் இணைத்து பேச்சு நடத்த ஒழுங்குபடுத்துமாறு பிரதேச செயலக அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்தார். அதன்படி, அடுத்த வாரமளவில் கூட்டத்தை நடத்துவதற்கு சம்மதம் தெரிவித்தனர்.

அத்தோடு, பொதுமக்களின் வேண்டுகோளுக்கிணங்க நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கூட்டத்துக்கு அழைக்குமாறு கேட்டுக்கொண்டனர். இதனையடுத்து நிவ அளவை திணைக்களத்தினர் திரும்பிச் சென்றனர்.

இதன்போது கருத்துத்தெரிவித்த கடற்றொழில் சங்கப் பிரதிநிதி, 'இந்தப்பிரதேசம் எமது வாழ்வாதார பிரதேசமாகும். குறித்த காணிக்கருகில் போதிப்புலம் இந்துமயானம் காணப்படுகின்றது. கடற்படை தற்போது வைத்துள்ள காணிக்குள் சிறுவர்களை நல்லடக்கம் செய்யும் இடம் இருக்கின்றது. இவர்களால் எங்களுக்கு எந்த பிரயோசனமும் இல்லை. எனவே இவர்கள் இங்கிருந்து வெளியேற்றப்பட வேண்டும்." - என்றார்.

மேலும் வட்டார உறுப்பினர் கருத்து வெளியிடுகையில், "குறித்த பகுதிக்குள் மயானத்துக்குச் சொந்தமான காணி இருப்பதாகவும் இதனை சட்டரீதியாக பெற்றுத்தருமாறும் பிரதேச சபை ஊடாக பிரதேச செயலருக்கு தெரியப்படுத்தியிருந்தோம். இதன் பின்னணியில் காணி சுவீகரிப்பில் ஈடுபட்டமை கண்டனத்துக்குரியது. படையினருக்கு காணி வழங்கப்படுமிடத்து எமது கடற்றொழிலாளரின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும். எனவே, இந்தவிடயத்தில் கரிசனையுடன் செயற்பட வேண்டும்." - என்று தெரிவித்திருந்தார்.

இதேவேளை 2020.10.08 ஆம்திகதிய அதிவிசேட வர்தமானியின் பிரகாரம் காணி அமைச்சரால் குறித்த காணி பகிரங்க தேவைகருதி காணி எடுத்தற்சட்டம் 5இன்கீழ் காணி கொள்வனவு செய்யபடுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ். மாநகர சபை உறுப்பினர் றஜீவ்காந், வட்டார உறுப்பினர், கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

(து-319)

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



ஐயனார் கோவிலடி, மல்லாகம்.

கடந்த 05.10.2021 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்ப தலைவன்

**அமரர் கதிர்காமத்தம்பி கதிர்காமதாஸ்**

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் இன்று (18.11.2021) வியாழக்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், 10.00 மணியளவில் வீட்டுக் கிருத்தியம் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். 21.11.2021 ஞாயிற்றுக்கிழமை 11.00 மணிக்கு இடம்பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.
077 9400 213

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 21 . 03 . 1955 — மறைவு 16 . 11 . 2021

**சிதம்பரநாதர் சச்சிதானந்தன்**
(ஓய்வுநிலை கிராம உத்தியோகத்தர்)

அவர்கள் 16.11.2021 செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்துள்ளார். இவரது மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆண்டுகள் பல சென்றாலும் ஆறுமோ உன் துயரம்**
**உள்ளன்புடன் உறவாட உங்கள் உருவின்றி**
**உளம் குமுறும் அன்பு நண்பன்.**

பொ.நவரத்தினராசா குடும்பம்
(இளைப்பாறிய கிராம உத்தியோகத்தர்)
எழுதுமட்டுவாழ் தெற்கு.

(CS 41158) (3/6)

## தென்மராட்சியில் பிரதி அதிபர்கள் இருவர் ஒரேநாளில் உயிரிழப்பு

சாவகச்சேரி, நவ. 18

தென்மராட்சிப் பிரதேச இரு முன்னணிப் பாடசாலைகளின் பிரதி அதிபர்கள் ஒரேநாளில் உயிரிழந்தமை கல்விச் சமூகத்தை கவலையில் ஆழ்த்தியுள்ளது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பிரதி அதிபர் சே.ரவீந்திரன் சுகவீனம் காரணமாக நேற்றுக்காலையும், மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் பிரதி அதிபர் ஐ.குணசீலன் நெஞ்சு வலி காரணமாக நேற்று மாலையும் உயிரிழந்தனர். (து-9)

## மரண அறிவித்தல்

பிறப்பு 15 . 03 . 1969



இறப்பு 17 . 11 . 2021

**ஐயாத்துரை குணசீலன்**
**(உப அதிபர் - யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி)**

இராமாவில் மீசாலை வடக்கு, கொடிகாமத்தை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திரு. ஐயாத்துரை குணசீலன் அவர்கள் நேற்று (17.11.2021) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் ஐயாத்துரை மகேஸ்வரி தம்பதியரின் இரண்டாவது புதல்வரும், முள்ளியவளையைச் சேர்ந்த காலஞ்சென்ற நடேசு வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், யோகேஸ்வரி (முகாமைத்துவ உதவியாளர், பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்) அவர்களின் அன்புக் கணவரும், அபிசனா, அசானிகா, அகசனா (யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், திருச்செல்வம் (சுவிஸ்), பரமேஸ்வரன் (லண்டன்), குகதாசன் (அமரர்), உதயகுமார் (மீசாலை), புனிதராசா (பிரான்ஸ்), முருகவதனி (ஆசிரியர்- கிளி/ கலவெட்டித்திடல் நாகேஸ்வரா வித்தியாலயம்), புஸ்பவதனி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், சாந்தினி (சுவிஸ்), சுரேகா (லண்டன்), விஜயதரணி (அபிவிருத்தி உத்தியோகத்தர், சுகாதார திணைக்களம்- வட மாகாணம்), தர்சினி (பிரான்ஸ்), மதிவதனன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம்-கரைச்சி), செல்வநந்தன் (லண்டன்), வினாயகமூர்த்தி (அமரர்), கனகசபாபதி (முள்ளியவளை), சுந்தரமூர்த்தி (முள்ளியவளை), செந்தில் வடிவேல் (அமரர்), அனந்தசயனன் (விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை), பார்வதி (புளியங்குளம்), மங்களேஸ்வரி (கொழும்பு), கணேஸ்வரி (கனடா) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.11.2021) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10.00 மணிக்கு வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இராமாவில், மீசாலை வடக்கு,**
**கொடிகாமம்.**
**077 641 3085, 077 0711 527**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CR 5941) 1-6

## 6ஆம் ஆண்டு நினைவும் 2ஆம் ஆண்டு நினைவும்



மலர்வு 14 . 06 . 1939 — உதிர்வு 25 . 11 . 2015

**முத்துத்தம்பி மகாதேவன்**



மலர்வு 16 . 06 . 1947 — உதிர்வு 05 . 04 . 2019

**மகாதேவன் நாகேஸ்வரி**

எங்கள் அன்புத் தாயே! ஆண்டு இரண்டு மறைந்தாலும்
ஆறிடுமோ எங்கள் துயரம் அம்மா, நிழல் தந்து எமை வளர்த்து
நிலைத்து மண்ணில் வாழ வைத்து உறுதியுடன் எமைக் காத்த
எங்கள் அன்புத் தெய்வங்களே!
உங்களது பிரிவினால் துடிதுடிக்கின்றோம்.

உறவென்ன உற்றாரென்ன ஏன் ஊராரும் வியக்கும்
எங்கள் குடும்பச் சொத்துக்களே!
என்னவென்று சொல்வது உங்களின் சேவையை
ஏங்கித் தவிக்கின்றோம். எங்கள் மாணிக்கங்களே!
மண்ணிலே மீண்டும் வந்து பிறவீர்களோ!
மறுபடியும் எம்மோடு கலந்து வாழ்வீர்களோ!

ஐயா, அம்மா என்று அழைத்த எங்கள் தெய்வங்களே!
ஒன்றல்ல இரண்டல்ல ஓராயிரம் வார்த்தை சொல்லும்
ஓயாமல் உழைத்திட்ட எங்கள் உத்தமர்களே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**196, காரைநகர் வீதி,**
**வில்லூண்டி பிள்ளையார் கோவில்,**
**யாழ்ப்பாணம்.**

**நினைவுகளுடன்**
**உங்களது பாசமிகு மகன்**

(CS 18071)1-6

## பகிரங்க அறிவித்தல்

கருகம்பானை காங்கேசன்துறை என்னும் முகவரியைச் சேர்ந்த நவரத்தினம் முகுந்தன் ஆகிய நான் பொது மக்களுக்கு அறியத்தருவதாவது எனக்குச் சொந்தமான ஆதனம் "தேற்றாவடிக்கலட்டி" நிலப்பரப்பு 65 விஸ்தீரணம் கொண்ட ஆதனம் J/281 பத்தமேனி கிராமசேவகர் பிரிவில் அமைந்துள்ளது. இவ் ஆதனத்தை வளலாயைச் சேர்ந்த பொன்னையா பத்மநாதன் என்பவரும் சரவணமுத்து சஜீந்திரன் என்பவரும் சட்ட விரோத உடமைகொண்டு கட்டடம் அமைத்து ஆதனத்தை அறுதி விற்க முற்படு கின்றார்கள் என்பதை இத்தால் அறியத்தருகிறேன். இவ் ஆதனம் தொடர்பாக மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் காணி வழக்கு இலக்கம் 234 / 2017 நடைபெற்றுக் கொண்டுள்ளது என்பதை அறியத்தருகிறேன். இவ்வாதனம் பிணக்குக்கு உட்பட்டுள்ளதால் ஒருவரும் கொள்வனவு செய்ய வேண்டாம் எனத் தயவு கூர்ந்த அறியத்தருகின்றேன்.

**ந.முகுந்தன்**
**(குறித்த வழக்கின் வழக்காளி)**

(CS 00920) (3/6)

## வீடு வாடகைக்கு

யாழ் மாநகரசபை எல்லைக்குள் இரண்டு அறைகளுடன் கூடிய அனெக்ஸ் வாடகைக்கு உண்டு. (பெண்கள் மட்டும் விரும்பத்தக்கது.

தொடர்புக்கு : **076 4474 227**

(CS 18072) 1-6

## வரவு செலவுத்திட்டம் 2022
## வலிகாமம் தெற்கு பிரதேசசபை

1987ம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் 168ம் பிரிவிற்கிணங்க வலிகாமம் தெற்கு பிரதேசசபையின் 2022 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டு 2021.11.18ம் திகதி தொடக்கம் 2021.11.26ம் திகதி வரை பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. இதனை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகம், சுன்னாகம், உடுவில், ஏழாலை உபஅலுவலகங்களிலும் சுன்னாகம், உடுவில், ஏழாலை பொது நூலகங்களிலும் பார்வையிடலாம் என்பதனை அறியத்தருகிறேன்.

**க.தர்ஷன்**
**தவிசாளர்**
**வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.**

(cr.36411) (2.6)

## முதலாம் ஆண்டு நினைவுநாள் அழைப்பு

தோற்றம் 03 . 10 . 1942



மறைவு 02 . 12 . 2020

தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும்,
அச்செழு வடக்கு, நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் சீனி பாலேந்திரன்

(ஓய்வுபெற்ற நில அளவையாளர்)
(முன்னாள் உத்தியோகத்தர் CDE Copvt Ltd)

எமது குடும்பத்தலைவரின் முதலாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு அன்னாரது இல்லத்தில் எதிர்வரும் (21.11.2021) ஞாயிற்றுக்கிழமை ஆத்ம சாந்தி பிரார்த்தனைகளுடன் நிகழ உள்ளது. தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தாழ்வன்புடன் வேண்டுகின்றோம்.

**ஓம் சாந்தி ! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி !!!**

"பாலகணேசா"
தவக்குன்றம்
சிவன் வீதி,
அச்செழு வடக்கு நீர்வேலி.

குடும்பத்தினர்.
**077 444 6533 / 077 729 6980**

(cs 18047) (2.6)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 12 . 11 . 1958



மறைவு 29 . 11 . 2020

### அமரர் ஆறுமுகம் நாகரட்ணம்

(ஓய்வூதியர் - பரியோவான் கல்லூரி)

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

**திதி : 18.11.2021**

ஆறாத்துயர் சுமந்து ஆண்டொன்று ஆனதுவோ
உனை இழந்து தவித்திடும் - என்
மனம் ஆறவில்லை, வலி நீங்கவில்லை
எத்தனை ஜென்மம் எடுத்திடினும்
என் சகோதரனாய் நீ வரும் வரையில்
காத்திருப்பேன் என்றும் பிரியமுடன்

(CS 41156) (3/6)

உடுவில் தெற்கு, சுன்னாகம்.
075 777 4631

நாகேஸ்வரி (அக்கா)
குடும்பத்தினர்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 06 . 12 . 1946



மறைவு 28 . 11 . 2020

அமரர்

### இராசலட்சுமி அருணகிரிநாதன்

**திதி: 18.11.2021**

ஆண்டு கடந்து போனது
உங்கள் கனவுகளில் - நீங்கள்
வெற்றி கண்டீர்கள் - இன்று
நீங்கள் இல்லாமல்
எங்கள் கனவுகள்
கலைந்து போனது ..... நாளை
உங்கள் பாதையில்
வெற்றி காண்போம்......

**என்றும் உங்கள் நினைவுகளுடன் உங்கள்**
**கணவர், பிள்ளைகள்,மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், உறவுகள்.**
**026 222 2829**

(cr.35841) (2.6)

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 26 . 11 . 1937



மறைவு 30 . 11 . 2020

வயாவிளான் அமரர்

### மயில்வாகனம் பத்மநாதன்

(இளைப்பாறிய பலாலி, அட்டாளைச் சேனை, ஆசிரியர் கலாசாலைகளின் உடற்கல்வி விரிவுரையாளரும், யாழ்ப்பாண பல்கலைக்கழக விளையாட்டுத்துறை போதனாசிரியரும்)

**திதி : 18.11.2021**

நீர் இந்த வேளை தன்னில்
சேய்கள் எம்மை மறந்தால்
நாம் இந்த மானிலத்தில்
ஆறுதல் யாரிடமே!

ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

(CS 411140) (3/6)

உதவி அரசாங்க அதிபர் அலுவலக வீதி,
உடுவில், சுன்னாகம்.

குடும்பத்தினர்

# சிவபூமி முதியோர் ஆச்சிரமம் கீரிமலையில் திறப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ. 18

யாழ்ப்பாணம் கீரிமலையில் அமைக்கப்பட்ட சிவபூமி முதியோர் ஆச்சிரமம், இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்குத் திறந்துவைக்கப்படவுள்ளது.

சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு, நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்குவார்.

யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, யாழ். மாவட்டச் செயலர் க.மகேசன், யாழ் இந்திய துணைத்தூதுவர் ராகேஷ் நடராஜ் ஜெயபாஸ்கரன், தெல்லிப்பழை பிரதேச செயலர் ச.சிவசிறி, வலி.வடக்கு பிரதேச சபைத்தவிசாளர் சோ.சுகிர்தன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர். (கு)

# யாழ்.பல்கலையில் சிறப்புத் தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு தங்கம்

யாழ்ப்பாணம், நவ. 18

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வணிக, முகாமைத்துவ பீடத்திலுள்ள கணக்கியல், நிதிமுகாமைத்துவம் மற்றும் வணிகம் (கணக்கியலும், நிதியும்) ஆகிய துறைகளில் பயின்று சிறப்புத் தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு வருடாந்த பட்டமளிப்பு விழாவின்போது தங்கப்பதக்கங்கள் வழங்கப்படவுள்ளன.

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் இந்தப் பதக்கங்கள் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இதற்காக வணிக முகாமைத்துவ பீடத்துக்கும், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்துக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு, யாழ். பல்கலைக்கழக வணிக, முகாமைத்துவ பீடாதிபதி பேராசிரியர் பா. நிமலதாசன் தலைமையில் நாளை நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சார்பில் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜாவும், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் சார்பில் அதன் தலைவரும், பட்டயக் கணக்காளருமான மனில் ஜெயசிங்கவும் புரிந்துணர்வு உடன்படிக்கையில் ஒப்பமிடவுள்ளனர். (கு-20)

# சிவஜோதியின் பிறந்ததினமும் 'என் எண்ண ஓட்டத்தில்' நூல் வெளியீடும் இன்று

கலை இலக்கியச் செயற்பாட்டாளரும் ஊடகவியலாளருமான மறைந்த வைத்தீஸ்வரன் சிவஜோதியின் பிறந்ததின நிகழ்வு இன்று நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி 'லிற்றில் எயிட்' நிறுவனத்தில் இன்றுமுற்பகல் 10 மணிக்கு வெளியீடு நடைபெறவுள்ளது. நிகழ்வில் 'என் எண்ண ஓட்டத்தில்' என்ற நூல் வெளியிடப்படவுள்ளதுடன் சிறந்த நாடக அமைப்புக்கான சிவஜோதி ஞாபகார்த்த விருதும் வழங்கப்படவுள்ளது. (கு)

# ஐந்தாம் ஆண்டு நினைவு தினம்

புகுந்த மண்ணில் புகழ் சேர்த்த கலைமகளின் கலைச்சிகரம்

## அமரர் தில்லை சின்னையா

(ஓய்வு நிலை உத்தியோகத்தர் விற்பனைத் திணைக்களம்)



**கண்கள் மகிழ** 05.07.1936 — **கண் நெகிழ** 17.11.2016

திதி : 18.11.2021

ஐந்தாண்டு கடந்தாலும்
ஓவியமாய் உறைந்திருக்கும் முகம் ஐயா!
காவியாமாய் வாழ்ந்தீர்
காலமெல்லாம் நினைத்திருப்போம் ஐயா!
வீறு கொண்ட தங்கள் குணம்
தேடி நாம் உருகுகிறோம் ஐயா!
கவி மகளுடன் வாழ்ந்திடுங்கள்
அல்வை ஆலடியான் காலடியில் ஐயா!
ஆன்மா சாந்தி அடைய
ஆலடியானையும் நல்லூர் கந்தனையும்
பிரார்த்திக்கின்றோம் ஐயா!
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

(cs.41137) (2.6)

"கவிதாலா"
15, நொத்தாரிஸ் வீதி,
அரியாலை வட மேற்கு, யாழ்ப்பாணம்.

தங்கள் நினைவில் வாடும்
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

தோற்றம் 10 . 07 . 1929



மறைவு 17 . 11 . 2021

## செல்லமுத்து வைகுந்தர்

கைதடி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லமுத்து வைகுந்தர் அவர்கள் நேற்று (17.11.2021) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வைகுந்தர் (முன்னாள் கிருஷ்ணா சைக்கிள் வேக்ஸ்-கைதடிச் சந்தி உரிமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும், அமரர்கள் நமசிவாயம் சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், அமரர்கள் தம்பிப்பிள்ளை தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், விஷ்ணுதேவி அவர்களின் பாசமிகு தாயாரும், புஸ்பராசா (முன்னாள் நியூலீலாவதி ஸ்ரோர்ஸ் கைதடிச் சந்தி, உரிமையாளர்) அவர்களின் பாசமிகு மாமியாரும், சிவகண்ணன்-கஸ்தூரி (கனடா), சிவரஞ்சனி, சிறிரங்கநாதன் (லண்டன்), ராஜிகா-சிவரூபன் (கனடா), தவரஞ்சிகா - சுதாகரன் (லண்டன்), பதிவர்ணண்-அஜிந்தா (லண்டன்) ஆகியோரின் பாசமுள்ள பேர்த்தியும், ஆதவி, ஏறன், அபினா, அபினன், ரவின், கபின், கரிம், டிசா, ரிசிவன் ஆகியோரின் அன்புப் பூட்டியாரும், அமரர்கள் முத்தாச்சி, சின்னத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும், அமரர்கள் சபாபதிப்பிள்ளை, தங்கமுத்து ஆகியோரின் அன்பு மைத்துனியும், யோகீஸ்வரன் (சுவிஸ்), யோகராணி (சுவிஸ்), யோகேஸ்வரி (கைதடி), யோகச்சந்திரன் (சுவிஸ்), யோகராசா (நோர்வே) ஆகியோரின் சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.11.2021) வியாழக்கிழமை காலை கைதடி கிழக்கு (மத்தி) யில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் கைதடி ஊற்றல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
தம்பிப்பிள்ளை புஸ்பராசா
மருமகன்
021 205 7401, 075 6736874

கைதடி கிழக்கு,
கைதடி.

(CS 18066)1-6

# 85 ஆவது பிறந்த தினத்திலே 34 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 18 . 11 . 1936



மறைவு 04 . 12 . 1987

## அமரர் இராசதுரை பஞ்சாட்சரம்

(உரிமையாளர் - அருள்முருகன் ஜுவலர்ஸ் ஸ்தாபகர்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்)

**திதி: பூரணை (18.11.2021)**

அன்பின் திருவுவே, பாசத்தின் பிறப்பிடமே
அன்பைப் பொழிந்து, அறிவைத் தந்து
எம்மை இவ்வுலகில் பொருமையோடு
வாழ வைத்த எம் அன்புத் தந்தையே!
அன்பான முகமும், ஆனந்த புன்சிரிப்பும்
இணையில்லா மிடுக்கும் இன்றும் எம்
கண்முன்னே நிழலாடுகின்றதே அப்பா !
கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
கடந்த காலம் என்றும் திரும்பி வரப்போவதில்லை
ஆனாலும் நீங்கள் எம்மை வாழவைத்து
மகிழ்வித்த காலத்தில் விட்டுச் சென்ற
ஞாபகங்கள் எம்மை வழி நடத்தும்
இன்று உங்கள் **85 ஆவது பிறந்த தினத்திலே**
**34 ஆவது ஆண்டு நினைவு தினத்தை**
நினைவு கூருகின்றோம்
உயிரூட்டி வளர்த்தீர்கள் - என்றும்
எங்கள் உள்ளத்தில் உயிர் உள்ளவரை - வாழ்வீர்கள்
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!

157/1, சாரங்கா நகைமாடம்,
யாழ்ப்பாணம்.

(cr.36413)(2.6)

குடும்பத்தினர்
077 357 7212

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 02 . 05 . 1945



மறைவு 30 . 11 . 2020

அராலியை பிறப்பிடமாகவும் சுழிபுரம் சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் உயர்திரு முருகேசு பத்மநாதன் (J.P)

(நல்லதம்பி, ஓய்வுபெற்ற பொறியியலாளர்,
இலங்கை மின்சார சபை)

எமது குடும்பத்தலைவரின் முதலாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு அன்னாரது இல்லத்தில் இன்று (18.11.2021) வியாழக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் ஆத்ம சாந்தி பிரார்த்தனைகளுடன் நிகழ உள்ளது. தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும், மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

சங்கானை வீதி,
சித்தன்கேணி.

குடும்பத்தினர்.

(CR 5939) 1-6

## அரசின்....

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடியது.

இதன்போது ஒழுங்குப்பிரச்சினையை எழுப்பிய ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஐக்கிய மக்கள் சக்தியால் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போராட்டத்தில் பங்கேற்க வந்த மக்களை பொலிஸார் திருப்பி அனுப்பியமை தொடர்பிலும், போராட்டத்தை ஒடுக்குவதற்கு அரச தரப்பில் கையாளப்பட்ட அடக்குமுறைகள் தொடர்பிலும் கருத்துக்களை முன்வைத்தனர். அத்துடன், "பொலிஸாரின் தாக்குதலில் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். இதற்கான பொறுப்பை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஏற்க வேண்டும்" என வலியுறுத்தினர். அரசின், பொலிஸாரின் செயற்பாடுகளையும் வன்மையாகக் கண்டித்தனர்.

கதிரைகளிலிருந்து எழுந்து, பதாகைகளைத்தாங்கி சபைக்குள் போராட்டத்திலும் ஈடுபட்டனர். "பொலிஸ் அமைச்சரே வெட்கம், நடிகைகளுக்கு உள்ளாடை, மக்களுக்கு தடியா" என எழுதப்பட்ட பதாகைகளையும் ஏந்தியிருந்தனர். சுமார் 15 நிமிடங்கள்வரை போராட்டம் இடம்பெற்றது.

அந்தவேளையில் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார உரையாற்றினார். அவர் கூறியவை வருமாறு:- "அரச ஊழியர்கள், விவசாயிகள் உட்பட அனைவரும் அரசுக்கு எதிராக இன்று வீதியில் இறங்கியுள்ளனர். மக்களின் எழுச்சியைத் தடுக்க பொலிஸார் நீதிமன்றத்தை நாடுகின்றனர். பொலிஸாரின் கோரிக்கை நீதிமன்றங்களால் நிராகரிக்கப்பட்டுள்ளன. மொட்டுக்கட்சிக்கு இன்று ஆதரவாளர்கள் இல்லை. அதனால்தான் பொலிஸார் அரசியலுக்கு பயன்படுத்தப்படுகின்றனர். பொலிஸாரைப் பயன்படுத்தி எமது கட்சியின் செயற்பாட்டாளர்களை மிரட்டுகின்றனர்.

போராட்டத்தில் பங்கேற்கவந்த எம்பிலிப்பிட்டிய பகுதி இளைஞர் ஒருவர் பொலிஸ் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளார். இதுவா ஜனநாயகம்?

பொலிஸை பயன்படுத்தி, மக்கள் படையை கட்டுப்படுத்த முடியாது. இது ஆரம்பம் மட்டுமே. நாம் ஒரு போராட்டத்தைதான் நடத்த இருந்தோம். எம்மை தடுத்து நாடு பூராகவும் போராட்டங்களை நடத்துவதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர். அதற்காக நன்றிகள்.

எமது போராட்டத்தை தடுத்து பெரும் அரசியல் தவறை இந்த அரசு செய்துவிட்டது. அரசின் ஆயுள் முடியப்போகின்றது. ஐந்தாண்டுகள் இருக்கவிடமாட்டோம். அதற்குள் மக்கள் எதிர்பார்க்கும் ஆட்சியை உருவாக்குவோம்." என்றார். (கு-44)

## தொற்று 72....

கொழும்பு, நவ. 18

இலங்கையில் நேற்றும் 728 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது. அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 53 ஆயிரத்து 772 ஆக எகிறியுள்ளது.

அத்துடன், கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 448 பேர் நேற்று குணமடைந்துள்ளனர். அதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 25 ஆயிரத்து 188 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை- இலங்கையில் மேலும் 23 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர். இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா உயிரிழப்புக்களின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 57 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உறுதிப்படுத்தப்பட்ட 23 சாவுகளில் 10 பெண்களும், 13 ஆண்களும் உள்ளடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (கு-22)

## வடக்கில்....

புள்ளது என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

வங்காளவிரிகுடாவில் நிலைகொண்டுள்ள தாழமுக்கம், தெற்கு ஆந்திரா மற்றும் தமிழ்நாட்டின் வடபகுதி ஊடாக இன்று கடக்கின்றது. இதனால், வடக்கு மாகாணம் மற்றும் புத்தளம், அநுராதபுரம், திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் மழைக்கு வாய்ப்புள்ளது. - என்று திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (கு)

## கிளிநொச்சியில்....

உறுதிசெய்யப்பட்டுள்ளது.

அக்கராயன்குளம், புதுமுறிப்பு, விவேகானந்தா நகர், ஆனந்த நகர், செல்வபுரம், பொன்நகர், வட்டக்கச்சி மற்றும் முழங்காவில் ஆகிய பிரதேசங்களிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கே கொரோனாத்தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று சுகாதாரத் தரப்புத் தெரிவித்தது. (கு-06)

## மனோ....

மன்ற உறுப்பினருமான மனோ கணேசன், கொரோனாத்தொற்றுக்கு உள்ளாகி சிகிச்சை பெற்றுவருகின்றார்.

ரபிட் அன்டிஜென் பரிசோதனையின் பின்னர் "எனக்கு கொரோனாத்தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. தற்போது தனிமைப்படுத்தப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றேன். விரைவில் நலமுடன் திரும்புவேன் என்று நம்புகின்றேன்'' என்று அவர் ருவிற்றரில் பதிவிட்டுள்ளார். (கு)

## தோற்றது....

டுள்ளது.

சபையின் அடுத்த ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் சபையில் நேற்றுச் சமர்ப்பிக்கப்பட்டது. அதன்போது, வரவுசெலவுத்திட்டத்துக்கு ஆதரவாக 8 வாக்குகளும், எதிராக 9 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 7 உறுப்பினர்களும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 2 உறுப்பினர்களும் எதிராக வாக்களித்தனர். சுயேச்சைக்குழு, ஈ.பி.டி.பி, அங்கஜன் இராமநாதன் தரப்பினர் ஆதரவாக வாக்களித்தனர். அதனால், ஒரு வாக்கு வித்தியாசத்தில் வரவு-செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டது.

வல்வெட்டித்துறை நகர சபையின் முன்னாள் தவிசாளரான கோணலிங்கம் கருணானந்தராசா (வயது- 76) கடந்த ஓகஸ்ட் மாதம் 11ஆம் திகதி கொரோனாத்தொற்றால் உயிரிழந்திருந்தார். இந்தநிலையில், கடந்த செப்ரெம்பர் மாதம் 22ஆம் திகதி புதிய தவிசாளர் தெரிவு நடைபெற்றது.

அதன்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிட்ட கே.சதீஸை ஒரு வாக்கு வித்தியாசத்தில் தோற்கடித்து, சுயேச்சைக் குழு உறுப்பினரான எஸ். செல்வேந்திரா புதிய தவிசாளராத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஈ.பி.டி.பி, சுயேச்சைக்குழு ஆகிய தரப்பின். பின்னணியில் எம்.ஏ.சுமந்திரன் அணியின் ஆதரவோடு சுயேச்சைக்குழு வல்வெட்டித்துறை நகரசபை ஆட்சியைக் கைப்பற்றியிருந்தது. தவிசாளராக செல்வேந்திரா பதவியேற்று இரண்டு மாதங்கள்கூட முடிவுறாத நிலையில் அவரது முதலாவது வரவு-செலவுத்திட்டம் நேற்று தோற்கடிக்கப்பட்டது.

இதேவேளை, நேற்றிலிருந்து 14ஆவது நாளில், வரவு - செலவுத்திட்டம் திருத்தங்களுடன் மீண்டும் சபையில் சமர்ப்பிக்கப்படவேண்டும். அன்றைய தினமும் வரவுசெலவுத்திட்டம் தோல்வியடைந்தால், தவிசாளர் பதவி இழக்க நேரிடும். (கு-20)

## போராட....

தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளார். இது தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டு, நீதி நிலைநாட்டப்பட வேண்டும்" - என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.

இந்தச்சம்பவம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று கவனத்தை ஈர்த்த நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே, இது தொடர்பில் மேலும் கூறியவை வருமாறு,:-

"எம்பிலிப்பிட்டிய பனாமுர பொலிஸ் பிரிவில், பொலிஸாரின் அடக்குமுறையால், பொலிஸாரின் தாக்குதலுக்கு இலக்காகி இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். இந்திக்க ஜயரத்ன என்ற இளைஞரே இவ்வாறு கொல்லப்பட்டுள்ளார். சடலம் தற்போது பனாமுர பொலிஸ் நிலையத்தில் உள்ளது.

ஒரு இளைஞரின் கொலையுடன் அடக்கு முறையை அரசு ஆரம்பித்துள்ளது. இது எங்கு சென்று முடியும் எனத் தெரியவில்லை. பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். கிராமம் பதற்ற நிலையில் உள்ளது. எனவே, உரிய விசாரணை நடத்தப்பட்டு, நீதி நிலைநாட்டப்பட வேண்டும்." என்றார்.

இந்தநிலையில், ஹேஷா விதானகே கூறியவற்றை என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் மறுத்தார்.

" இந்திக ஜயரத்ன (வயது 37) என்பவரே கைதானவர். அவர் போதைப்பொருளுக்கு அடிமையானவர். அவர் பொலிஸ் தாக்குதலில் கொல்லப்படவில்லை. சிறைக்குள் தற்கொலை செய்துகொண்டுள்ளார். போதைப்பொருளுக்கு அடிமையானவர் தினமும் மனைவி மற்றும் பிள்ளைகளை தாக்கியுள்ளார். இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடுகள் உள்ளன.

தலைமறைவாகியிருந்த அவர், நேற்றிரவு (நேற்றுமுன்தினம்) 10 மணியளவில் கைது செய்யப்பட்டுள்ளார். அதிகாலை (நேற்று) 3.30 மணியளவில் சிறையிலுள்ள கம்பியொன்றில் கழுத்தை இறுக்கிக்கொண்டு உயிரிழந்துவிட்டார். " என்றார்.

"பொலிஸ் காவலில் உள்ளவர்களுக்கும் அரசே பொறுப்பு. அமைச்சரின்கூற்றை நம்பமுடியாது. சுயாதீன விசாரணை வேண்டும்"- என் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன சுட்டிக்காட்டினார். (கு-44)

## இளம் குடும்பஸ்தர்....

டன் அவருடைய சடலம் மீட்கப்பட்டது.

இதே பகுதியைச் சேர்ந்த முத்தையா கேதீஸ்வரன் (வயது -27) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார். குறித்த சடலத்தில், முகத்தின் மீது கடுமையான வெட்டுக்காயங்கள் காணப்பட்டன. சம்பவ இடத்துக்குச்சென்ற, கிளிநொச்சி பதில் நீதிவான், கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையின் சட்ட மருத்துவ அதிகாரி ஆகியோர் நிலைமைகளை அவதானித்தனர். சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்குமாறு நீதிவான் கட்டளையிட்டார். கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இதேவேளை, சடலமாக மீட்கப்பட்டநபர், குடும்பத்தகராறு காரணமாக மனைவி, பிள்ளையைவிட்டு நீண்டகாலமாக பிரிந்து வாழ்கின்றார் என்று, அவரது மனைவி வழங்கிய வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு-6,214,)

## ராஜபக்சக்களை....

உறுப்பினர் இரா.சம்பந்தன் தெரிவித்தார். கொழும்பில் அரசுக்கு எதிராக நேற்றுமுன்தினம் நடைபெற்ற மாபெரும் போராட்டம் தொடர்பில் கருத்துரைக்கும் போதே அவர் மேலும் தெரிவித்ததாவது: ஆட்சியில் அமர்த்திய சிங்கள மக்களாலேயே ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசு விரட்டியடிக்கப்படும் காலம் உருவாகுகின்றது. கொழும்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் நடைபெற்ற போராட்டத்தில் அந்தக்கட்சியின் ஆதரவாளர்கள் மட்டும் கலந்துகொள்ளவில்லை. அரசை ஆட்சிக்குக் கொண்டு வந்த சிங்கள மக்களும் பங்கேற்றுள்ளனர். நாடெங்கும் அரசுக்கு எதிரான போராட்டங்கள் விஸ்வரூபமடைந்து வருகின்றன. வீதிகளில் மக்கள் அலை மோதுகின்றது. இந்த நிலைமைக்கு அரசே முழுப்பொறுப்பு. அடக்குமுறைகளால் மக்களை ஆள முற்பட்டமையாலேயே அரசு இன்று தலைகுனியும் நிலை ஏற்பட்டுள்ளது. என்றார். (கு-22)

## நினைவேந்தலுக்கு....

நினைவிற்கொள்ள தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவில்**

கணபதிப்பிள்ளை விஜயகுமார், தவராசா கணேஸ்வரன், சபாரத்தினம் யோகநாதன், ஜேசுதாசன் பெற்றிக்யூட், வேலுப்பிள்ளை தியாகராசா, ஆண்டிஐயா புவனேஸ்வரன், க.ஜெனமேஜெயந், சி.குகநேசன், சி.சிவமோகன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தம்பையா யோகேஸ்வரன், அன்ரன் ஜீவராசா, மரியசுரேஸ் ஈஸ்வரி பேதுறுப்பிள்ளை ஜெராட் மற்றும் ஒட்டுசுட்டான் பிரிவில் இராமலிங்கம் சத்தியசீலன், தர்மலிங்கம் ஜீவரெத்தினம், தம்பையா யோகேஸ்வரன் ஆகியோருக்கும்,

**முல்லைத்தீவு பொலிஸ் பிரிவில்,**

வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர்களான து.ரவிகரன், எம்.கே.சிவாஜிலிங்கம், தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்த அன்ரனி ஜெயநாதன் பீற்றர் இளஞ்செழியன், சமூக செயற்பாட்டாளர்களான முத்துராசா சிவநேசராசா(கரன்), தம்பையா யோகேஸ்வரன்(முல்லை ஈசன்), இசிதோர் அன்ரன் ஜீவராசா, பேதுருப்பிள்ளை ஜெராட், கனகசபாபதி விஸ்வலிங்கம் விக்னேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவப்பிரகாசம் சிவமோகன்,

முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத் தலைவி மரியசுரேஷ் ஈஸ்வரி, ஆகியோருக்கும் தடை உத்தரவு பெறப்பட்டுள்ளதாக் கூறப்பட்டது. நீதிமன்றின் உத்தரவு விரைவில் உரியவர்களின் கைகளில் ஒப்படைக்கும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (கு-19)

# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 09 அத்திக்காட்டு வடக்கு ஒழுங்கையில் ஆதன இல 34/4 என்ற இலக்கம் கொண்ட ஆதனமானது கனகரட்ணம் பெண் புவனேஸ்வரி என்ற பெயரிலே ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகிறது.

குறித்த ஆதனத்தில் சொரியலாய் 1/6 பங்கு பிரசித்த நொத்தாரிசு சுப்பிரமணியம் செல்வநாயக ராசா மகாதேவா முகதாவில் 1976.07.10ம் திகதியில் 5746ம் இலக்க அறுதி உறுதி மூலம் கனகரத்தினம் செல்வராசா என்பவரிடமிருந்து கந்தையா கனகரத்தினம் என்பவருக்கு அறுதியாக வழங்கியுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

பிரசித்த நொத்தாரிசு புஸ்பரட்ணம் அபிதன் முகதாவில் 2021.01.18ம் திகதி 71ம் இலக்க வெளிப் படுத்தல் உறுதியில் குறித்த கந்தையா கனகரத்தினம் மரணசாதனம் ஏதும் நிறைவேற்றாமலும் நிர்வகிக்கப்பட வேண்டிய பெறுமதிக்கும் குறைவான பெறுமதியுடைய சொத்துக்களையும் விட்டுக் காலஞ்செல்ல குறித்த ஆதனம் முழுவதும் கனகரத்தினம் தவராசா, கனகரத்தினம் செல்வராசா, கனகரத்தினம் இந்திராணி, கனகரத்தினம் யோகராணி, கனகரத்தினம் நீலராணி ஆகியோரிற்கு சொந்தமானதாய் இருந்ததென்றும் இவர்களில் கனகரத்தினம் தவராசாவைத் தவிர வேறு எவரும் திருமணம் முடிக்காமலும் அடியற்றும் மரணசாதனம் ஏதும் நிறைவேற்றாமலும் காலஞ்சென்றமையினால் கனகரத்தினம் தவராசாவின் பிள்ளைகளான, தவராசா பரணிகாந், தவராசா சரணிகாந், தவராசா தரணிகாந் ஆகியோரிற்கு முதுசமாக வந்தடைந்ததாக கூறப்பட்டுள்ளது.

**ஆதன அட்டவணை:-** வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளி கோவிற் பற்று சிவியாதெரு இறை நல்லூர் பிரதேசசெயலர் பிரிவு, யாழ்ப்பாணம் மாநகரசபை J/96 அரியாலை மத்தி தெற்கு கிராமசேவையாளர் பிரிவுக்குட்பட்ட "அத்திக்காட்டு நடுவளவும் வடலித்தோட்டமும் அத்திக் காட்டு மேற்கு வளவும் அத்திக்காட்டு வளவு கிழக்கும் பிராயடித் தாழ்வும் புலமும் அத்திக்காட்டு வளவும் " நில பர 35 1/4 இது தற்போது 2021ம் ஆண்டு தை மாதம் 02ம் திகதி நில அளவையாளர் S.சுப்பிரமணியம் முகதாவில் 0083ம் இலக்கத்தில் விஸ்தரிக்கப்பட்ட படத்தில் முதலாம் துண்டாகக் காட்டப்பட்டபடி விஸ்தீரணம் நிலப்பரப்பு இருபத்தியாறு குளி ஏழு தசம் ஐந்து (நில பர 26 குளி 7.5) **இதற்கு எல்லை**

**கிழக்கு** :- புவனேந்திரன் ஜயலட்சுமியின் ஆதனம்.
**வடக்கு** :- தம்பு கதிர்வேலுவின் ஆதனம்.
**மேற்கு** :- தனராசா தேவகியின் ஆதனம்.
**தெற்கு** :- தனராசா தேவகியின் ஆதனமும் அரசடி வீதியும் இதடாங்கலும்.

தற்போது தவராசா பரணிகாந், தவராசா சரணிகாந், தவராசா தரணிகாந் ஆகியோர் இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது தவராசா பரணிகாந், தவராசா சரணிகாந், தவராசா தரணிகாந் என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**விஸ்வலிங்கம் மணிவண்ணன்**
**கௌரவ முதல்வர்**
**மாநகரசபை**

(cr.36409) (2.6)

# 3 ஆம் ஆண்டு நினைவலைகள்



உதிப்பு
12 . 09 . 1935

உதிர்வு
22 . 11 . 2018

அமரர்

## தம்பையா இரத்தினசபாபதி

(ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்)

**திதி: பௌர்ணமி**

ஆண்டுகள் மூன்று பறந்தோடி
நினைவுகள் ஒவ்வொன்றாய்
நிழல் படமாய் எம் திரையில்
நீள் ஒளியாய் காட்சிதர
நிஜத்தை இழந்த தவிப்போடு
நாமும் தேடுகின்றோம்
திதி பார்த்து துதித்த வண்ணம்
இறைவனிடம் பிரார்த்திக்கின்றோம்.

**சிங்கராஜா வீதி,**
**கல்வியங்காடு,**
**நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.**

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்**

(cr.36408) (2.6)

# மரண அறிவித்தல்



தோற்றம்
15 . 06 . 1936

மறைவு
11 . 11 . 2021

## திருமதி பாக்கியம் சங்கரப்பிள்ளை (B.A)

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், இல.35, பலாலி வீதி, யாழ்ப்பாணத்தை நிரந்தர வசிப்பிடமாகவும், இல.29, புகையிரத நிலைய விடுதி, திருகோணமலையைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியம் சங்கரப்பிள்ளை அவர்கள் கடந்த 11.11.2021 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. பொன்னையா - திருமதி இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான திரு. நாராயணன் - திருமதி இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற திரு.சங்கரப்பிள்ளை (B.SC,- Hons, Dip - in Edu,- ஓய்வு பெற்ற ஆசிரியர், முன்னாள் திட்ட இணைப்பாளர் - சர்வோதயம், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், திருகோணமலை) அவர்களின் அன்பு மனைவியும், திருமதி ஹேமலதா மகேஸ்வர் (BSC - முன்னாள் ஆசிரியை, தி/சண்முகா இந்து மகளிர் கல்லூரி - கனடா), காலஞ்சென்ற செல்விகள் ஸ்வர்ணலதா (B.A,Dip - in Edu, English Trained, முன்னாள் ஆசிரியை, யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி), மற்றும் கீதாஞ்சலி (B.A English Trained, முன்னாள் ஆசிரியை, யா/கொட்டடி நமசிவாயம் வித்தியாலயம்), செல்வி மீரா (இலங்கை புகையிரதத் திணைக்களம்), திருமதி வாணி சுரேஸ்குமார் (முன்னாள் ஆசிரியை, தி/ ஆலங்கேணி விநாயகர் ம.வி.- இந்தியா), திரு. பாலமுரளி (இலண்டன்), ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு.மகேஸ்வர் (கனடா), திரு. சுரேஸ்குமார் (இந்தியா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஜனனி, பிரதீப், ரிஷி, ஒவியா, இலக்கியா ஆகியோரின் அன்பு அம்மம்மாவும், காலஞ்சென்றவர்களான திரு. இராசையா (ஓய்வுபெற்ற உதவிப் போக்குவரத்து அத்தியட்சகர், புகையிரதத் திணைக்களம்), திரு. பூவிலிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), மற்றும் திரு. இராசரத்தினம், திரு. சிவஞானம் (ஓய்வுபெற்ற பொறியியலாளர் - இ.போ.சபை), திருமதி பரமேஸ்வரி அன்ரனி (ஓய்வுநிலை உப அதிபர்), திரு.பரமானந்தம் (பிரான்ஸ்), திரு. பாலச்சந்திரா (ஓய்வுபெற்ற ஆசிரியர்), ஆகியோரின் அன்புச் சகோதரியும், பரிபூரணம், காலஞ்சென்ற மரியமுத்து, சுசீலாதேவி, பரமேஸ்வரி, புவனேஸ்வரி, பவானி, காலஞ்சென்ற திரு. பூபாலசிங்கம், திருமதி சிவபாக்கியம் (கனடா), காலஞ்சென்ற திருமதி சின்னமணி, திருமதி ஜெயலட்சுமி, திருமதி ஜீவரட்ணம், செல்வி. மல்லிகா (ஓய்வுபெற்ற ஆசிரியை), திரு.தவகுலரட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 19.11.2021 வெள்ளிக்கிழமை அன்று இல. 35, பலாலி வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 11.00 மணிக்கு கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொடர்பு : 021 222 0096** (CS 41153) (3/6) **தகவல் : குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்



தோற்றம்
03 . 01 . 1939

மறைவு
17 . 11 . 2021

## முத்துக்குமாரு விநாயகமூர்த்தி

(கணேஸ் ஐயா)

குருக்கள் பகுதி கரணவாய் கிழக்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முத்துக்குமாரு விநாயகமூர்த்தி அவர்கள் நேற்று (17.11.2021) புதன்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், சுப்பிரமணியம், மயில்வாகனம், கனகாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரும், காலஞ்சென்றவர்களான முருகேசு - வள்ளியம்மை தம்பதியினரின் அன்பு மருமகனும், கௌரியம்மா (பாக்கியம்) அவர்களின் பாசமிகு கணவரும், சண்முகநாதன், சண்முகராசா, பகவதி ஆகியோரின் தந்தையாரும், கார்த்திஜாலினி, துஸ்யந்தி, சீனிவாசம் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற பரமேஸ்வரி, திலகவதி மற்றும் சிவகாமிப்பிள்ளை, கனகசபை, செல்வராசா, குலசபாநாதன், யோகாம்பிகை, விக்னராசா, மனோன்மணி, யோகராணி, இராசலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் சிவானுகா, மதீசனன், கீர்த்திதன், ஸ்ரீ நிகேதன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (17.11.2021) புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வெல்லன்கிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல் :**
**குடும்பத்தினர்**

(CR 36410) (3/6)



# பாலம் அமைக்குமாறு கோரி கல்மடுநகரில் ஆர்ப்பாட்டம்

கிளிநொச்சி,நவ.18

பாலம் அமைக்குமாறு கோரி கண்டாவளை கல்மடுநகர் ரங்கன் குடியிருப்பு மக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அந்தப் பகுதி மக்கள் தமது அன்றாட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு பயன்பாட்டிலிருந்த பாலம் முற்றாக அகற்றப்பட்டுள்ளது. பாலம் அகற்றப்பட்டு பல மாதகாலம் கடந்த நிலையிலும், புதிய பாலம் அமைப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் மக்களின் நாளாந்த போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதிகளில் சட்டவிரோத மணல் அகழ்வும் இடம்பெறுவதால், வீதியும் சேதமடைந்துள்ளது. இதனால் தனியார் காணி ஊடாகவே மக்கள் பயணிக்க வேண்டியுள்ளது. எனவே புதிய பாலத்தை அமைத்து போக்குவரத்து இடரை நீக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தினரின் ஏற்பாட்டில் ஆர்ப்பாடம் இடம்பெற்றது. (ஒ-4,113)

# 300,000 அன்டிஜென் கருவிகள் ஜேர்மனியால் நன்கொடை!

ஜேர்மன் மாநிலமான பேடன்வூர்ட்டம் பேர்க்கின் சமூக விவகாரங் கள், சுகாதாரம் மற்றும் ஒருங்கிணைப்பு அமைச்சு, கொரோனாவைக் கட்டுப்படுத்தும் இலங்கையின் முயற்சிகளுக்கு உதவியாக 3 லட்சம் அன்டிஜென் பரிசோதனைக் கருவிகளை வழங்கியுள்ளது.

கொரோனாவைக் கண்டறிந்து அதன் பரவலைக் கட்டுப்படுத்த உதவும் பெறுமதிமிக்க இந்த நன்கொடையை வழங்கியமைக்காக ஜேர்மனிய மாநிலமான பேடன்வூர்ட்டம்பேர்க்கின் சமூக விவகாரங்கள், சுகாதாரம் மற்றும் ஒருங்கிணைப்பு அமைச்சுக்கு இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமண பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்தார்.

(ம)



# இலங்கைக்கான தூதுவர்கள் மூன்று பேர் நற்சான்றுப் பத்திரத்தைக் கையளித்தனர்!



கொழும்பு, நவ. 18

இலங்கைக்குப் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள 3 தூதுவர்கள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் நேற்றுமுன்தினம் தமது நற்சான்றுப் பத்திரங்களை கையளித்துள்ளனர். இலங்கைக்கான தாய்லாந்துத் தூதுவராக நியமிக்கப்பட்ட பொஜ் ஹரான்பொல், இலங்கைக்கான தென்னாபிரிக்கத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள சண்டில் எட்வின்சல்க், இலங்கைக்கான ஜப்பான் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள ஹிடேகிமிஸுகொஷி ஆகியோரே, தமது நற்சான்றுப் பத்திரங்களைக் கையளித்தனர். இலங்கை மற்றும் தமது நாடுகளுக்கு இடையிலான நீண்டகால உறவை, புதிய துறைகளின் ஊடாக மேம்படுத்துவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக, ஜனாதிபதியிடம் அவர்கள் தெரிவித்தனர். (ம)


## வேலையாள் தேவை

அச்சக வேலைக்கு ஆட்கள் தேவை. Book வைன்டிங் செய்யக்கூடியவர்கள் விரும்பத்தக்கது.
இணுவில் (CS 41152) (3.6) 077 220 9474

## வேலையாள் தேவை

ஊர்காவற்துறை சுருவில் அருகில் வீட்டை பராமரிப்பதற்கும் வீட்டில் தங்கியிருந்து பணிபுரிவதற்கும் வேலையாள் தேவை. சிறிய குடும்பம் விரும்பத்தக்கது (cs.41154) (2.6)
077 061 6191

## பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கி நின்று வீட்டு வேலைகள் செய்வதற்கு பணிப்பெண் தேவை.
வயது : 35-55
சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும். (CS 41151)(3.6)
070 664 0579, 077 364 0579

## Room வாடகைக்கு

கோண்டாவில் திருச்செல்வம் வீதியில் சகல வசதிகளும் கொண்ட Room வாடகைக்கு உண்டு. பெண்கள் மட்டும். (பல்கலைக்கழக மாணவிகள் விரும்பத்தக்கது.
தொடர்பு:
021 221 6160, 077 238 9614 (CS 18069) 1-6

## காணி விற்பனைக்கு

பலாலி றோட் ஊரெழு மனோன்மணி அம்மன் கோவிலுக்கு 100M அருகாமையில் 3 பரப்பு காணி விற்பனைக்கு. 1 1/2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும். தொடர்பு: (CS 18070) 1-6
077 6585999, 077 5058 561


# கண்ணீரில் கரைந்த ஓராண்டு நினைவஞ்சலி



உலகெலாம் ஒளிரும் கார்த்திகைத் திருநாளில் அணைந்துவிட்ட எமது ஆருயிர் மகள்

## அமரர் தர்ஷினி ஜெயரட்ணம்

(பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியை -
சின்னமடு மகாவித்தியாலயம்,
முன்னாள் யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்,
யா/அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயம்,
யா/வேலணை மத்திய கல்லூரி)

மலர்வு 03.08.1977 — உதிர்வு 30.11.2020

நெய்ப்பூசு மென்தோகை நேரிழையார் கொண்டாடும்
தைப்பூசங் காணாதே போதியோ பூம்பாவாய்
பலிவிழாப் பாடல்செய் பங்குனி உத்தரநாள்
ஒலிவிழாக் காணாதே போதியோ பூம்பாவாய்

கார்தரு சோலைக் கபாலீச்சரம் அமர்ந்தான்
ஆதிரைநாள் காணாதே போதியோ பூம்பாவாய்
துளக்கில் கபாலீச்சரத்தான் தொல் கார்த்திகைநாள்
விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்.


லோட்டன் வீதி,
மானிப்பாய்.
18.11.2021)

குடும்பத்தினர்.

(cs.41157) (2.6)

# மரண அறிவித்தல்

தோற்றம் 30 . 01 . 1935



மறைவு 16 . 11 . 2021

## கந்தையா நவரத்தினம்

கொக்குவில் மேற்கு, மஞ்சவனப்பதி வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நவரத்தினம் அவர்கள் நேற்று முன்தினம் (16.11.2021) இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா விசாலாட்சி அவர்களின் அன்பு மகனும், காலஞ்சென்ற பொன்னுத்துரை இலட்சுமி அவர்களின் அன்பு மருமகனும், நவரத்தினம் பத்மாதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான க.தில்லையம்பலம், க. சண்முகலிங்கம், க.சிற்றம்பலம், க.சிவராசா மற்றும் வை.திருப்பதி, ச.சிவபாக்கியம் ஆகியோரின் சகோதரரும், க.சந்திரலீலா, யோ. சந்திரவதனா, ந.ரவிச்சந்திரன் ஆகியோரின் அன்பு தகப்பனாரும், இ. கருணாநிதி, வ.யோகேஸ்வரன், ர.ஆனந்தவல்லி ஆகியோரின் மாமனாரும், இந்துஷா, பங்கஜா, தெய்வீகா, தர்சனா, ஜனனி, பிரவீன் பிரணவன், அஸ்வினி, அரூஸ் அவர்களின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.11.2021) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணிக்கு கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மஞ்சவனப்பதி வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்

தகவல்:
குடும்பத்தினர்

(CS 41155) (3/6)



பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.11.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.